மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII.	Madras: July 1911.	No 7.
புத்தகம் - ௧௩.	சென்னப்பட்டணம்: ஜூலை 1911.	இலக்கம் - 7.

பட்டாபிஷேகதினம்.

வெஸ்ட் மின்ஸ்டர் கோயிலுக்கு வெளியில்.

லண்டன் மாநகரத்திலுள்ளவர்கள் பட்டாபிஷேகத்தினம் அதிகாலையிலேயே திரள்திரளாக வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலண்டைபோனார்கள். டிக்கட் பெற்றவர்கள் தங்கள் ஸ்தானத்திற்குப்போய் உட்கார்ந்து கொண்டார்கள். தெருக்களில் வெகு ஜனங்கள் கும்பலாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். அநேகர் முந்தியநாள் இரவிலேயே புறப்பட்டு எப்படியாவது நமது அரச சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் பட்டாபிஷேக உடுப்புகளுடன் கண்டுகளிக்க வேண்டுமென்று தக்க பார்வையுள்ளயிடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்களாம்.

பொது ஜனங்களும் போலீசாரும் ஒத்து உழைத்தமையால் அநேக ஸ்திரீகளும், குழந்தைகளும் நல்ல பார்வையுள்ளயிடங்களில் உட்கார்ந்து அரசரையும் ராணியையும் பார்த்தார்களாம். லண்டன் போலீசார் பொறுமையுடனும் புத்தி சாதுரியத்துடனும் நடந்து கொண்டதைப்பற்றி நமது அரசரும், மற்றவர்களும் புகழ்ந்து பேசுகிறார்களாம். இவர்களைத்தவிர ஒரு சபையைச்சேர்ந்த மெம்பர்களாகிய ஸ்திரீகளும் புருடர்களும் தங்கள் தேகசௌகரியங்களைச் சிறிதும் கவனியாமல் கும்பலில் புகுந்து கிழவர்கள், குழந்தைகள், ஸ்திரீகள் அக்கூட்டத்தில் அவஸ்தைப்படுவதைக் கண்டு அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்துவந்தார்களாம்.

மழையே யில்லாமலிருந்திருந்தால் வெகு சிறப்பாகயிருந்திருக்குமாம். சிற்சில சமயங்களில் மழைபெய்ததாம். பட்டாபிஷேக சமயத்தில் சூரியன் தன் கிரணங்களோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது ஜனங்களுக்கு அதிக மகிழ்ச்சியையுண்டாக்கியது. பக்கிங்ஹாம் அரமனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் அரமனைக்கு சக்ரவர்த்தி புறப்பட்டதும் அதிர் வெடி சப்தம் முழங்கிற்று. அலங்காரம் செய்யப்பட்டுள்ள தெருக்களெல்லாம் வெகு ரமணீயமாக தென்பட்டதும் தவிர ஜனங்களும் ஆநந்த சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள்.

நமது சக்ரவர்த்தியின் பொன்முலாம் பூசிய வண்டி 8 அழகு பொருந்திய குதிரைகளால் பூட்டப்பட்டிருந்தன. குதிரைகளின் அலங்காரம் வெகு நேர்த்தியாயிருந்தது. தேவலோகத்திலிருந்து தேவதைகள் தான் இங்குவந்து இவ்வண்டியில் உட்கார்ந்திருக்கிறார்களோவென எண்ணும்படியாயிருந்ததாம். ஊர்கோல காட்சி, வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலுக்குப் போகுமவரையில் லண்டன்மாநகரத்து ஜனங்கள்-புருடர்கள், ஸ்திரீகள், குழந்தைகள்-திரளாகவந்து கொண்டிருந்தார்கள். லண்டன்மாநகரத்து அதிகாரி தமது விலையுயர்ந்த வண்டியிலும், அநேக ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தங்கள் பழைய வண்டிகளிலும், சென்றார்கள். இதரதேசத்து மன்னர்களும், பிரபுக்களும் சென்றார்கள். கோயிலுக்குச் சமீபத்தில் சக்ரவர்த்தி வந்தபொழுது ஜனங்கள் சந்தோஷத்தால் கரகோஷம் செய்தார்கள்.

கோயிலில் மகுடாபிஷேகச் சடங்கு முடிந்ததும் சக்ரவர்த்தி பட்டாபிஷேக காலத்தில் தரிக்கவேண்டிய உடுப்புகளைத் தரித்துக்கொண்டது மன்றி கிரீடத்தையும் சிரசில் வகித்துக்கொண்டு தமது மனைவியாகிய மேரி ராணியுடன் கோயிலிலிருந்து லண்டன்மாநகரத்தைச் சுற்றிப்போனார்கள். எங்கு பார்த்தாலும் ஜனங்கள் திரளாக கண்கொட்டாமல் நமது சக்ரவர்த்தியை பட்டாபிஷேக உடுப்புடன் பார்க்க ஆவலாயிருந்து, இவர்கள் வரும்பொழுது இவர்களைக் கண்டு நல்வரவு கூறும் பாவனையாக கரகோஷம் செய்தார்கள். "நமது ராஜன் வாழ்க" என்று சங்கீதம்பாடினார்கள். இந்திய துருப்புக்கள் பக்கிங்ஹாம் அரமனைக்கு எதிரிலிருந்தார்கள். இங்கு நமது சக்ரவர்த்தி வந்தவுடன் இந்திய துருப்புக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கரகோஷம் செய்தார்கள். நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் அரமனையின் மெத்தையில் நின்று எல்லா ஜனங்களையும் கண்டு மரியாதையாக தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள்.

கோயிலுக்குள்.

காலையில் ஆறு அரை மணிமுதல் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் வரும்வரையில் அதாவது 11-மணிவரையில் 7,000 ஜனங்கள் வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலுக்குள் வந்துகொண்டிருந்தார்கள். 5-மணி நேரகாலம் ஜனங்கள் காத்திருந்தபோதிலும் காலம் சென்றதும் தெரியவில்லையாம். அவர்களுக்கு அலுப்பு முண்டாகவில்லையாம் கீழ்போட்டிருந்த இரத்ன கம்பளத்தின் பற்பலவர்ணங்கள் கண்ணுக்கு ஒருவித சந்தோஷத்தை யுண்டாக்கின. குருமார்கள் அணிந்திருந்த உடுப்புகளும், அரசர்கள் தங்கள் உடுப்புகளோடு இருந்ததும் வெகு ரமணீயமாயிருந்தன. ராஜவம்சத்தார்கள் அணிந்திருந்தஉடுப்புகளும் பார்க்க வெகு அழகாயிருந்தன. இவ்விதம் ஜனங்கள் உள்ளேவந்து கொண்டிருக்கும்பொழுது இந்திய மன்னர்கள் தங்கள் சுதேச இராஜ உடுப்புகளுடன் வந்தபொழுது உடுப்புகள் பளபளப்பாய் மின்னிக்கொண்டு கிழக்கு தேசத்து பிரகாசத்தை வீசியதைப்பார்க்க பதினாயிரங் கண்களிருந்தாலும் போதாதாம். மேலும் இந்திய மாதர்கள் தங்கள் விலையுயர்ந்த பட்டு பீதாம்பரங்களைத் தரித்துக்கொண்டும் நாகரிகத்துக்குப் பொருந்திய சிற்சில விலை உயர்ந்த ஆபரணங்களை யணிந்துகொண்டும் வந்ததானது மேற்குதேசங்களிலில்லாத அழகைக் காண்பித்ததுடன், ஆநந்தத்தையும் உண்டாக்கின.

காத்துக்கொண்டிருந்தவர்கள் காலதாமதத்தைச் சிறிதும் மனதில் கருதாமல் அங்குள்ள விசித்ரகாட்சியைக் கண்டுகளித்துக்கொண்டிருந்தார்கள். இக்கோயில் பூர்வகாலகட்டடம். இதன் பழையசுவர்களும், இதன்சிற்பசாஸ்திர அழகும், ஒருபக்கத்தில் ஜனங்களின் மனதைக் கவர்ந்துகொண்டிருந்தபோதிலும் மகுடாபிஷேகச்சடங்கின் விசேஷங்களும் அவைகள் மத சம்பந்தமாயிருப்பதும் இவர்களது ஆத்மார்த்த ஞானத்தை விருத்திசெய்வதுபோலும் தோன்றின. இவ்விடத்தில்தான் நமது சக்ரவர்த்தி தாம் வகிக்கப்போகும் அபார வேலையின் அதிகாரத்தை அடைந்தார். “கடவுள் முன்பாக தாம் தமது பிரஜைகளைச் சரியாக ஆளக்கடவேன். அரசர்களுக்கெல்லாம் அரசராக கடவுள் கையிலிருந்து எனது கடமையைப்பெற்றேன்” என்றார். ஏனெனில், ஒரு வருஷகாலமாக சக்ரவர்த்தி சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசுபுரிந்துவருகிறாரல்லவா? இவரது செங்கோல் இவரது அருமையான தகப்பனார் காலஞ்சென்ற முதல் தழைத்து ஓங்கி வளர்ந்துவருகிறது. ஆனால் மகுடாபிஷேகச் சடங்கு அப்பொழுது நடக்கவில்லை. இச்சடங்கு கடவுள் முன்பாக ஜனங்களுக்கும் சக்கரவர்த்திக்குமுள்ள ஐக்யத்தைக் குறிக்கிறது. இச்சடங்கின் விஷயங்களெல்லாம் மேற்சொன்ன ஐக்யத்தை உறுதி படுத்துகின்றன.

அரசனே சாதாரணமனிதன்தான். அவனே தன துஜனங்களின்(பிரஜைகளின்) ஊழியக்காரன். நியாயமாய் ராஜ்யத்தை ஆண்டுவர அவன் ஏற்படுகிறான். ஆகையால் இப்பிரபஞ்சத்தில் தான் செய்யவேண்டியகடவுள்கட்டளையைச்சரியாகச் செய்துமுடித்தால் சாஸ்வதமாயுள்ள பரலோகத்தை யடைய வழி ஏற்படும்.

“நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியை கடவுள் காப்பாற்றுவாராக” என வெஸ்ட்மின்ஸ்டர் பாடசாலைப்பிள்ளைகள் கீச்சுக்குரலுடன் சொன்னார்கள். சக்ரவர்த்தி வந்துவிட்டார். உடனே சங்கீதம் முழங்கிற்று. நமது வீட்டில் கலியாண காலத்தில் ஒருபக்கம் புரோகிதர் மந்திரத்தைக் கவனியாமல் பணம் பணம் என்று சொல்வதுபோலும், ஒருபக்கத்தில் எனக்கு மரியாதை செய்யவில்லையென்று சம்பந்திகள் செய்யும் சண்டையும், இருப்பதுபோலின்றி நிர்சப்தமாயிருந்தது. அக்கோயிலில் மகுடாபிஷேகச் சடங்கு வெகு நன்றாக நடைபெற்றது. சக்ரவர்த்தி கிரீடம் தரித்துக்கொண்டதும் கோயிலுக்குள் கரகோஷம் செய்தார்கள். கோயில்மணியடிக்கப்பட்டது. வாத்தியம்முழங்கிற்று. வெளியிலுள்ள ஜனங்களுக்குத் தெரியுமாறு அதிர்வடி சப்தம் உண்டானது. இளம் பிராயமுள்ள இளவரசு (Prince of Wales) ராஜவுடையைத் தரித்துக் கொண்டு பூர்வமத சம்பிரதாயப்படி சக்ரவர்த்தியை வணங்கினார். சக்ரவர்த்தியோ தகப்பனார்க்குரிய அன்போடு தமது புத்திரனை ஆலிங்கனம் செய்துகொண்டு அவனை ஆசீர்வதித்தார். ஒனபது வருஷங்களுக்குமுன் தமது தகப்பனார்—விக்டோரியா மகாராணியார் காலஞ்சென்ற பிறகு—பட்டத்துக்கு வந்தபொழுது தம்மை அவர் அன்புடன் ஆலிஙகனம் செய்தது மறந்து போகுமா?

சக்ரவர்த்தி தாம் கிரீடம் தரித்துக்கொண்டபின் தமது இல்லாளின் மகுடாபிஷேகச் சடங்குகளை வெகு ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தார். சடங்கு சுருக்கமாயிருந்தும், பார்கக வெகு நன்றாயிருந்தது. பலிபீடத்திற்கு சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும்சென்றபொழுது தங்களது ராஜஅடையாள

ங்களை யெல்லாம் எடுத்து ஒரு இடத்தில் வைத்துவிட்டு, சாதாரண மனிதன், ஸ்திரீயைப்போலும், உண்மையான கிருஸ்தவர்களாயும் (Holy Communion) பரிசுத்த நற்கருணையைப் பெற்றார்கள்.

உடனே ஊர்கோலம் புறப்பட சித்தமாயிருந்தார்கள். சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் பலிபீடத்தைவிட்டு மேற்குதிக்கிலுள்ள கதவண்டை வந்ததும் வராததும் ஊர்கோலம் ஆரம்பமானதென்றே சொல்லலாம். ஆலயத்தில் ஜனங்களின் ஊக்கமும் சந்தோஷமும் அச்சிறந்த தெய்வீக ஸ்தலத்தால் கட்டுப்பட்டிருந்தபோதிலும், இனி அவைகள் வெளிக்கிளம்பாமல் அமிழ்ந்திருக்க முடியவில்லை. சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும், கடவுளிடமிருந்து சத்யம் என்றதைக்குறிக்கும் அடையாளத்தைப்பெற்றுக்கொண்டு குதூகலமாயிருக்கும் ஜனங்களுடன் ஊர்கோலம் சென்றார்கள். உடனே வெளியில் காத்துக்கொண்டிருந்த ஜனங்கள் சந்தோஷத்தால் கைகொட்டினார்கள். ராஜன் வாழ்க என்று சொன்னார்கள்.

அரசசக்ரவர்த்தியும் பிரஜைகளும்.

லண்டன் மார்க்கமாய் ஊர்கோலம்.

மறுநாள் வெள்ளிக்கிழமை சக்ரவர்த்தியையும், சக்ரவர்த்தினியையும் கண்டு களிக்க ஆவலுடன் தெருக்களிலிருந்த தமது பிரஜைகளை யெல்லாம் பார்ப்பதற்காகவே ஊர்கோலம் சென்றார்கள். ஊர்கோலம் சென்ற மார்க்கம் சுமார் 8 மைலுக்கு மேலிருக்கும். அரமனையிலிருந்து ஊர்கோலம் புறப்பட்டு லண்டன்மாநகரில் சென்றது. லண்டன் நகரத்து பாலத்தைத் தாண்டியபின் இன்னொரு பக்கமாக ஊர்கோலம் சென்றது. இங்குள்ளவர்கள் தினம் வேலைசெய்து ஜீவிப்பவர்கள். உடுக்க விலையுயர்ந்த வஸ்திரமின்றி சாதாரண உடுப்புடனும் மனக்களிப்புடனும் அரசசக்ரவர்த்தியைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தார்கள். இவர்களது ஊக்கமும் உற்சாகமும் அந்நகரத்தில் மேற்கு திசையிலுள்ள தனவந்தர்களுக்குக் கூட அவ்வளவில்லையாம். குறுகலாயுள்ள தெருக்களில் மின்சார விளக்குகளில்லையாம். ஆனால் சிற்சில விடங்களில் மினிமினிக்கொண்டு மெழுகுவர்த்தி விளக்கும், சாதாரண விளக்கும், கொடிகளுமிருந்ததாம். மேலும் மகரதோரணங்களும், பூபந்தல்களும் வெகு அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தன. ஜனங்கள் வெகு உற்சாகத்துடன் சகரவர்த்தியை வாழ்த்தி கரகோஷமும் செய்தார்கள்.

பட்டாபிஷேகத் தினத்தில் ஜனங்கள் எவ்வளவு குதூகலமாயிருந்தார்களோ அதைவிட ஆயிரம் மடங்கு அதிக சந்தோஷத்துடனிருந்தார்களாம். யுத்த கப்பலைச் சேர்ந்தவர்கள் தங்கள் சந்தோஷக்குறியைக் காண்பித்தார்

கள். பீரங்கிகளை 8 மைல் தூரம் இழுத்துக்கொண்டு வந்தவர்கள் களைத்துப் போனதாக காட்டிக்கொள்ளவில்லை. காலாட்படைகள், குதிரைப்படைகள், முதலியவர்களும் ஆநந்த சாகரத்தில் மூழ்கி யிருந்தார்கள். பூலோகத்தி லுள்ள பற்பல தேசங்களிலிருந்தும் சைனியங்கள் மரியாதை செய்யவும் இக்காட்சியைக் கண்டுகளிக்கவும் வந்திருந்தார்கள். இரண்டு தினங்களிலும் இந்திய துருப்புக்களிருந்தன. இவர்களின் சாமர்த்தியத்தைக் கண்டு சக்ர வர்த்தி அவர்கள் புகழ்ந்து பேசினார்கள்.

இந்த ஊர்கோலத்தில் இன்னொரு விசேஷம் என்னவெனில் இந்தியமன் னர்களும் பிரபுக்களும், தங்கள் சுதேச இராஜாங்க உடுப்புகளுடன் வந்திருந் ததே. இந்தியர்களை எங்கு அங்குள்ள ஜனங்கள் கண்டபோதிலும் முகமலர்ச் சியுடன் அவர்களுக்கு மரியாதை செய்துவந்தார்கள். முதல் வண்டியில் பரோடா மகாராஜாயிருந்தார். கடைசி வண்டியில் கொண்டால் தாகூர் சாயபு அவர்கள் தமது மனைவி புத்திரிகளுடனிருந்தார்கள். நமது இந்திய மன்னர் களை அங்குள்ளவர்கள் வெகு ஆவலுடன் பார்த்தார்கள். இவர்களைக் கண்டு வணங்கினார்கள் சிலர். சிலர் இந்திய மன்னர்களும் இந்தியர்களும் வந்திருப் பது நமக்கு மிகுந்த ஆநந்தத்தை யுண்டாக்குகிறதென்றார்கள்.

இவ்விதம் வெகு தூரம் ஊர்கோலம் சென்றபோதிலும் அச்சமயத்தில் ஜனங்கள் காண்பித்த சந்தோஷ அறிகுறியானது நமது சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் மிகுந்த திருப்தியை யுண்டாக்கியதாம். இவர்கள் தங்க ளது அரமனைக்குச் சென்றவுடன் பட்டாபிஷேக உடுப்புடன் மெத்தையில் நின்றுகொண்டு தெருக்களில் கும்பல் கும்பலாய் நின்று நமது சக்ரவர்த்தி யைக் காணவேண்டுமென்ற ஆவலுடனிருந்த ஜனங்களைத் தாமும் புன்சிரிப் புடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலநேரம் சென்றபின் ஜனங்கள் தங்க ளிருப்பிடம்போக ஆரம்பித்தார்கள்.

லண்டன்மாநகரப் பிரவேசம்.

"மகுடாபிஷேக தினத்தன்று லண்டன் நகரத்துக் காட்சியையும், அது கொண்ட கோலத்தையும் எடுத்துரைப்பது அசாத்தியம். அநேக வாரங்க ளாக அந்நகரத்து ஜனங்கள் மகுடாபிஷேக மகோற்சவத்தின் பொருட்டுத் தத்தம் வீடுகளையும் தெருக்களையும் அலங்கரிப்பதே தொழிலாய்க் கொண்ட னர். வீதிகள் யாவும் அதிஅழகாய்ச் செப்பனிடப்பட்டன. மகர தோரணங் களும, பச்சிலைகளும், புஷ்பமாலைகளும், பற்பல வர்ணத்துணிகளும், கொடி களும், மாடமாளிகை, கூடகோபுரம், சாதாரண வீடு, குடிசை, மரம், செடி என்னும் பேதமின்றி எங்கும் தொங்கி இளக்தென்றற் காற்றில் இன்பமாய் அசைந்துகொண்டிருந்தன. பலவர்ணந் தீட்டிய கொடிகளும், புஷ்ப ஆரங் களும் ஆகாயத்தில் அசைந்துகொண்டிருப்பது, காருண்யசீலராம் எம் அரசர் மகுடாபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டு களிகூர 'வாருங்கள்! வாருங்கள் !!' என்று அனைவரையும் அழைப்பதுபோலிருந்தது. விநோதமாயமைத்த வீதி களின் இருபுறத்தும் பாதசாரியாய்ச் செல்வோர்க்கென்று இயற்றப்பட்டு ள்ள ஒற்றடிப் பாதைகளினழகும், உட்கார்ந்து அரசன் பவனிபோவதைப் பார்ப்பதற்கென்று ஏற்படுத்திய சிங்காரமேடைகளின் சொகுசும், மிக்க விசித்திரமாயியற்றிய தீபங்களைத் தாங்கி நிற்கும் கணக்கில்லாத தீபஸ்தம்பங்

களின் சிறப்பும், அத்தீபங்கள் ஆகாயத்தினின்றும் படிகமாலைகள் அணி யணியாய்த் தொங்குவதுபோலவும், வானத்திலுள்ள நட்சத்திரங்கள் யாவும் அங்கு இறங்கி வந்தாற்போலவும, கோடி சூரியர் ஒருங்கே பிரகாசித்தாற் போலவும் பிரகாசித்து இரவைப் பகலாக்கும் சிறப்பும், மகுடாபிஷேகத் திற்கென்று செய்யப்பட்டு ஆங்காங்கு விளங்கும் அதி மனோகர அலங்காரங் களைப் பார்க்கும்பொருட்டு ஜனங்கள் கும்புகும்பாய்ச் செல்லும் சிறப்பும், குதிரைகள் ஒன்றும் இரண்டும் பலவுமாய்ப் பூட்டிய ரதங்களின் சிறப்பும், பளீர் பளீர் என்றொளிவிட் டெறியும் வாளும் ஈட்டியும் தரித்துக் குதிரை யின்மீது அங்குமிங்கும் விரைந்துசெல்லும் யுத்தவீரரின் சிறப்பும், ஜனங் களுக்கு இடையூறொன்றும் நேரிடா வண்ணம் ஆங்காங்கு நின்று தங்கட மையைச் செலுத்தும் நகர காவலரின் தொகுப்பும், பார்க்கப் பார்க்கப் பர மானந்தத்தை விளைத்தன. எங்குச்சென்றாலும் எப்பக்கம் பார்த்தாலும் லண்டன் நகரம் முழுவதும் கொடி ஸ்தம்பங்களடர்ந்த ஓர் காடுபோலவும், புஷ்பங்களும் பச்சிலைகளும் நிறைந்த ஓர் நந்தவனம்போலவும், மன்னர் மன் னனின் மகுடாபிஷேக உற்சவத்தைக் கொண்டாடும்படி அந்நகரத்தார் இயற் றிய ஓர் அலங்கார மண்டபம் போலவும் காணப்பட்டது.

லண்டன் நகரமோ இயல்பாகவே மிக்க அழகு வாய்ந்தது. அவ்வாறு கிய இயற்கை யழகோடு மேற்கூறிய செயற்கையழகும் சேர்ந்த அந்நகரம் மண்டலாதிபசியும் ராஜாதி ராஜனும் எம்மனைவரையும் அன்புடன் ஆண்டு வரும் சற்குண சீலருமாகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடைய பட்டாபிஷேக வைபவத்தை மிக்க அவாவுடன் எதிர்பார்த்திருந்து" அவர்களை தமது நகரத் திற்குள் பிரவேசிக்கும்படி அந்நகரவாசிகள் வேண்டிக்கொண்டனர். செண்ட் பால் கோயிலில் கடவுள் ஸ்தோத்திரம் முடிந்தபின் லண்டன்மாநகரத்து அதிபதி (Lord Mayor) நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியை யும் உபசாரத்துடன் லண்டன்மாநகரத்திற்குள் பிரவேசிக்கும்படி வேண்டிக கொண்டார்கள். அவ்விதமே பிரவேசித்து கில்ட்ஹாலில் அறுசுவையோடு விருந்துண்டார்கள். இச்சமயத்தில் அநேக மன்னர்களும், பட்டவர்த்தனர்க ளும், பிரபுக்களும், சீமாட்டிகளும் வந்திருந்தார்கள். நமது சக்ரவர்த்தியார் இந் நகரவாசிகள்செய்த மரியாதையைக் கண்டுகளித்தார்கள். ஜனங்களும் தங்கள் விருப்பம நிறைவேறியதைக்குறித்து அளவற்ற சந்தோஷமடைந்தார்கள.

யுத்தகப்பலைப் பார்வையிடல்.

ஜுன்மீ 24உ ஸ்பிட்ஹேட் என்றயிடத்தில் யுத்தகப்பல்களை நமது அரச சக்ரவர்த்தி முதலானவர்கள் பார்வையிட்டார்கள். மங்கோலியா என்ற யுத்தகப்பலில் இந்தியா செக்ரிடெரி, லேடிக்ருவும் இந்தியாதேசத்து மன்னர் களும் தங்கள இராஜ்ய கவலையின்றி பாடசாலைப் பிள்ளைகள் தமாஷாக ஒரு முக்ய ஸ்தலத்திற்குச்சென்றால் எவ்விதமிருப்பார்களோ அவ்விதமிருந்தார் கள். மேலும் இராணிகளும் இராஜகுமாரத்திகளு மிருந்தார்கள். பரோடா மகாரர்ணியார், இந்திரா ராஜபுத்திரி, கொண்டால் ராணியும் அவரது இரண்டு இராஜபுத்திரர்களும், பிக்கனீர் ராணி, ஈடர்ராணி, போபால்பீகம், முதலிய வர்களிருந்தார்கள். ராணுவ உத்தியோகஸ்தர்கள் ராணுவ உடுப்புகளைத் தரி ததுக்கொண்டிருந்தார்கள. இவைகள் ராஜகுமாரத்திகளது உடுப்புகளுக்குச்

சமமாக விளங்கிற்றும். இந்திய அருப்புக்கள் வேறொரு கப்பலில் தங்கியிருந் தார்கள்.

மங்கோலியாவில் மேலும் இந்தியாவிலுள்ள சிவில் உத்தியோகஸ்தர்களும், சில ஜட்ஜிகளும், எல்லா பாகங்களிலுமுள்ள கௌன்சிலர்களுமிருந்தார்கள். நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் இங்கு வந்தவுடன் பீரங்கிகள் வெடிதீர்ந்தன. 167-பிரிடிஷ் கப்பல்களிலும், 18-இதரதேசத்துக் கப்பல்களிலும் நெருப்பு மஞ்சள் நிறத்துடன் பளீரென்று மின்னிக்கொண்டும், வெண்மைநிறமான புகை மேல்கிளம்பிக்கொண்டும், பீரங்கி சப்தமும், நமது அரச சக்கரவர்த்தி வந்துவிட்டாரென்பதை தெரிவித்தன. இவைகள் மாத்திரமா? ஜனங்கள் சந்தோஷத்துடன் நமது அரசரைக் கண்டவுடன் ஒருவருக்கொருவர் பேசும் சப்தமும் கேட்டது. நமது அரச சக்ரவர்த்தியும் இவர்கள் நல்வரவு கூறியவுடன் சும்மாயிருக்கவில்லை. இவரது கப்பலிலிருந்து "நல்வரவை அங்கிகரித்து அதிக சந்தோஷமடைந்தோம் என்பதைக்குறிக்க, பீரங்கி வெடிகள் தீர்ந்தன. நமது அரச சக்ரவர்த்தி சாதாரண கல்விமாத்திரமடைந்தவரல்ல. யுத்தகப்பலில் 16 வருஷகாலம் அதிக கஷ்டப்பட்டு உழைத்து எல்லாத் தொழில்களையும் செம்மையாய் அறிந்துகொண்டிருக்கிறார்.

இவ்விதம் எல்லா கப்பல்களையும் பார்வையிட்டு மகிழ்ந்து தமது அரமனைக்குப் புறப்பட்டார்கள். நமது சக்ரவர்த்தியின் முடிசூட்டுக்காக இதரதேசத்து இராஜாக்கள் சிநேக பான்மையாய் தங்கள் விசுவாசத்தையும், விருப்பத்தையும் காண்பிக்கவே தங்கள் கப்பல்களை அனுப்பியிருந்தார்கள். இவைகளில் ஜப்பான் யுத்தகப்பல் முதன்மையானதென்று சொல்லலாம். எல்லாதேசத்து மன்னர்கள் இவ்விதம்செய்தது நமது சக்ரவர்த்தியின செங்கோலின் நீதிமுறைமையைக்காண்பிக்கின்றதல்லவா? மேலும் இவர்கள் நமது சக்ரவர்த்திக்கு இவ்விதம் மரியாதை செய்தது நமக்கு கௌரவமே. நமது "ஜார்ஜ் மன்னரும் மேரி அரசியும் நீடூழி வாழ்க" என்று ஆசிகூறுவோம்.

பத்திராதிபர்.

பரோமீடரின் உபயோகங்கள்.

பரோமீடரின் உதவியால் ஒவ்வொரு இடத்திலும் இவ்வளவுதான் வாயுவின் அழுத்தம் என்பதைக் கண்டிப்பாய்த் தெரிந்துகொள்ளலாம் என்று போனபாடத்தில் சொன்னோமல்லவா? காற்றின் அழுத்தம் இவ்வளவு என்று அளந்து அறிந்துகொண்டு அதன் மூலமாய் ஒரு ஊர் மற்றொரு ஊரைவிட உயரமோ தாழ்வோ என்பதை ஒருவாறாய்த் தீர்மானிக்கலாம். உதாரணமாகச் சென்னையில் பரோமீடர் 30 அங்குலம் இருக்கின்றது; தாராபுரத்தில் சுமார் 29 அங்குலம் இருக்கின்றது; ஆகையால் தாராபுரத்தில் காற்றின் அழுத்தம் குறைவு; எனெனில் தாராபுரம் சென்னையைவிட உயர்ந்திருக்கிறது. கோயமுத்தூரில எவ்வளவுயரம் பரோமீடரின்உயர முண்டோ அதைவிட மேட்டுப்பாளையத்தில் குறைவாய் இருக்கும். சுமார் 1000 அடி உயரம் அதிகப்பட்டால் பரோமீடரில் 1 அங்குலம பாதரசம் குறைவுபடும்.

பலதினப்பத்திரிகைகளில்—மெயில், ஸ்டாண்டார்ட், இந்து இவற்றில்—ஒவ்வொரு ஊரிலும் தினம்தினம் பரோமீடர் இவ்வளவு உயரத்தில்நின்றது, என்று ஒரு குறிப்பு அச்சிட்டு இருக்கும். இதுவரையில் நீர் அதைப்பாராது இருந்தால் இனியாவது அதை கவனிக்கவேண்டும். அதன் உபயோகம் என்னவென்று உமக்குத் தெரியுமா? நான் முன் சொன்னபடி ஒரு ஊர் மற்றொரு ஊரைவிட உயரம் தாழ்வு என்பதை மட்டும் அறிந்துகொள்வதற்கு அன்று; அப்படியிருந்தால் தினம் தினம் பிரயாசைப்பட்டு அவற்றை அச்சிடவேண்டியதில்லையே ? மேலும் 4 நாளைய பேபர்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளிலும் பரோமீடரின் உயரம் ஒவ்வொரு ஊரிலும் எவ்வளவு என்பதை கவனிக்கவும். ஒரே ஊரில் தினம் தினம் ஒரே மாதிரி இருப்பதில்லை. அது ஏன் ? தினம் தினம் காற்றின் அழுத்தம் வேறுபடுகின்றதா ? ஆம் ! வேறுபடுகின்றது; ஆக்ஷேபணையில்லை; ஒரே ஊா ஒருநாள் உயரமாயும், ஒருநாள் தாழ்வாயும், மற்றொருநாள் குறைவாயும் போகிறதா ? பூமிக்கு அடியில் இருந்து ஆதிசேஷன் ஒருநாள் உயர்த்துத் தாங்கியும், ஒருநாள் தாழ்த்தும் தூக்குகின்றனா ? பூமி அம்மாதிரி சலனம் அடைகின்றதில்லையே ? பின்னை என் காற்றின் அழுத்தம் ஒரே ஊரில் நாளுக்குநாள் வெவ்வேறு விதமாய் இருக்கவேண்டும்? இதை விவரிக்க உங்களுக்கு ஒரு சிறிய உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒரு பெரிய பாத்திரத்தில் வெந்நீர் எடுத்துக்கொள்ளுங்கள். அதில் தலைகீழாய் ஒரு கண்ணாடி டமலரை பிடித்துக்கொள்ளுங்கள். கிட்டத்தட்ட முழுவதும் வெந்நீருககு அடியே இருக்கட்டும். சிறிதுநேரம் காத்துக்கொண்டு இருக்கலாம். இப்பொழுது என்ன பார்க்கின்றீர். குமிழ் குமிழாய் காற்று வெளியே போகிறது. டம்லரில் ஜலம் ஏறிவிட்டதா. பாருங்கள்; இல்லை. வாயுஇன்னமும் டம்லரில் நிரம்பி இருக்கின்றது; இன்னுமொரு குமிழ் வெளிப்படுகின்றது. அப்படியும் டம்லர் நிரம்பித்தான் இருக்கிறது. காற்றுப் போய்க்கொண்டே இருக்க டம்லர் மட்டும் நிரம்பியிருக்கக் காரணம் என்ன? இது அச்சரியமல்லவா ? இதற்குக் காரணம் வேறு ஒன்றுமில்லை; காற்று சூடாகும்போது புதுக்காற்று வர இடமில்லாவிட்டாலும் உஷ்ணத்தால் விரிவடைகின்றத. கையினுள் அடக்கிவைத்து இருக்கும் ரப்பரை விரித்துவிட்டால் பரவுவதுபோல் காற்று அளவில் அதிகமாகிப் பரவுகின்றது. அளவின் அதிகமாகவே டம்லரில் இடமில்லாமல் வெளியேறுகின்றது. புதிதாய்க் காற்றோ வேறு வழியாய் டம்லரின் வர இடமில்லை. உள்ளிருக்கும் காற்றோ சூட்டால் விரிவடைகின்றது. ஆகையால் உள்ளிருக்கும் காற்றுக்குப் பொருள் நெருக்கம் குறைவுபடுகின்றது; அழுத்தமும் குறைவுபடுகின்றது. உடனே டம்லரை குளிர்ந்த ஜலத்தில் காலதாமதம் செய்யாமல் கவிழ்த்தால் குளிர்வதால் காற்று அளவில் குறைவதையும் ஆகையால் அதன்பொருள் நெருக்கம் அதிகமாவதையும் காணலாம்.

பொருள் நெருக்கம் குறைவாய் இருந்தால் அவ்விடத்தில் வாயுவின் அழுத்தும் சக்தியும் குறைவாய்த்தான் இருக்கும் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். (Less XXIII) பொருள் நெருக்கம் அதிகமாய் இருப்பின் வாயுவின் அழுத்தும் திறமையும் அதிகமாய் இருக்கும். (பாபடாங் குழலைப்பற்றி எழுதியுள்ள பாடத்தைப் பார்க்க.)

இவ்விஷயம் உங்களுக்குத் தெரிந்தால் ஒரே ஊரில் தினத்துக்கு தினம் பரோமீடர் மாறவேண்டிய காரணம் நன்கு விளங்கும். ஒரு ஊரில் ஒருநாள் அதிகமாய் வெயில் அடிக்கலாம். அதனால் அவ்வூர் நிலமெல்லாம் காய்ந்து அக்காரணம் பற்றி காற்றும் உஷ்ணமடையலாம். (டம்லரை வெந்நீரில் கவிழ்த்தபோது டம்லர் உஷ்ணமடைந்து பிறகு காற்றை உஷ்ணமாக்கின்றதல்லவா ? அதுவேபோல்) காற்று உஷ்ணமடைந்தால் வாயு தன் அளவில் அதிகமாகி விரியும்; விரிந்தவாயு டம்லரிலிருந்து வெளியேறினதுபோல் வெளியேறிப்போகிறது. அவ்வூரில் காற்றின் பொருள் நெருக்கம் குறைந்துபோவதற்கு என்ன தடை ? உடனே அழுத்தும் சக்தியும் குறைகின்றது. குறையவே முன்போல் அவ்வளவு பாதரசத்தைத் தாங்கமுடிவதில்லை. பாதரசம் சற்று இறங்கிவிடுகின்றது. ஏப்பிரல் மாதம் 15, 16, 17, 18 தேதிகளில் சென்னையில் காற்றின் அழுத்தம் 29.

இந்நாள்களில் குறைந்துபோனதற்குக் காரணம் விளங்கிற்றல்லவா ? சிலநாள் குளிர்ச்சி மிகுந்து காற்று தன் அளவிற் சுருங்கி பொருள் நெருக்கம் அதிகமாகி அமுத்தும் சக்தியும் அதிகமாகலாம். அதையும் கண்டறிந்து கொள்ளுங்கள்.

இம்மாதிரி ஒவ்வொரு நாளும் காற்றின் அழுத்தம் வெவ்வேறு மாதிரியாய் இருக்கக்கூடும் என்று நிரூபித்தோமே, இதே காரணம் பற்றி ஒரே நாளில் காலை, மாலை, சாயங்காலம். ராத்திரி இச்சமயங்களில் மாறலாம் அல்லவா என்று நீங்கள் கேட்கலாம்; ஆம் நீர் கேட்பது சரியே!! குளிர்ந்த காலையில் இருப்பதைவிட உஷ்ணமான மாலையில் பரோமீடரின் உயரம் குறைந்து இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இவையெல்லாம் நேரில் இரண்டுநாள் பரிக்ஷை செய்தால் நன்கு விளங்கும்.

ஆம் ஐயா எந்த நாளில் எப்படி மாறினால் என்ன? எந்த ஊரில் பரோமீடர் எப்படி நின்றால் என்ன ? நமக்கு அதனால் என்ன பிரயோசனம் என்று கேட்பீர்களானால் சொல்லுகிறேன்.

பரோமீடர் பல ஊர்களிலும் எவ்வளவில் நிற்கின்றது என்பதை அறிவதனால் பல நன்மைகள் உண்டு. அதைச் சீக்கிரம் நீர் அறியலாம். ஒரு ரப்பர் ஊதியை எடுத்து ஊதினால் அது பெருத்து உப்புகிறதற்குக் காரணம் தெரியுமல்லவா ? கையை எடுத்துக் காற்றை விட்டால் எங்கிருந்து எப்புறம் காற்று ஓடுகிறதென்று நீங்கள் கவனித்துப் பாருங்கள். 'பாப்பட்டாங்' குழலில் இருபுறமும் காயை வைத்து அடைத்துவிட்டு ஒரு புறத்தில் உள்ள காயை அடைப்பானைக்கொண்டு தள்ளினால் உளளிருக்கும் காற்று என்னகிறது ? எப்புறம் ஓடுகிறது ? ஏன் ? இவைபோன்ற இன்னும் பல பரிக்ஷைகள் நாம் செயது இருக்கிறோம் அல்லவா ? இவற்றை கவனித்தால், காற்று எப்பொழுதும் அழுத்தம் அதிகமாய் உள்ள இடத்திலிருந்து அழுத்தம் குறைவாய் உள்ள இடத்திற்கே ஓடும் என்பது நன்கு விளங்கும்.

இப்பொழுது சமுத்திரக்கரையில் உள்ள இரண்டு பட்டணம் எடுத்துக் கொள்வோம். இரண்டும் கூடிய மட்டில் ஒரே உயரமாய்த்தான் இருக்கும். உதாரணமாக சென்னையையும் புதுச்சேரியையும் எடுத்துக்கொள்வோம். ஒருநாள் சென்னையில் மிக உஷ்ணமாய் இருபபதுபற்றி அவ்விடத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் பரோமீடர் 29. 44 அங்குலம் உயரத்தில் நிற்கின்றது. ஆனால் புதுசசேரியில் சற்றுக குளிர்ச்சியாய் இருபபதால் 29, 6 அல்லது 29. 54 அங்குலம் இருப்பதைககாட்டும். இவை இரண்டுபட்டணங்களையும யோசிக்கும்போது புதுச்சேரியில் காற்றின அழுததம் அதிகமாகையால்

அவ்விடமிருந்து பட்டணத்தை நோக்கிக் காற்று வீசும் என்பது உங்களுக்கு விளங்கும். அதுவேபோல் நெல்லூர் முதல் இராமேச்சுவரம் வரையிலும் உள்ள ஊர்களில் பரோமீடர் சற்றுக்குறைவாய் இருந்தால் காற்றின் அழுத்தம் அந்த ஊர்களில் குறைவென்றும், நெல்லூருக்குமேல் கல்கத்தா வரையில் உள்ள இடங்களில் பரோமீடர் உயர்வாய்இருந்தால் காற்றின் அழுத்தம் அதிகமென்றும், தெரிவித்தால் வட ஜில்லாக்களில் இருந்து தென்புறமாய்க் காற்று அடிச்கும் என்பது நிர்ணயம் செய்யலாம் அல்லவா ? மைசூர் கோயமுத்தூர் இவ்விடங்களில் காற்றின் அழுத்தம் குறைவாயும் சமுத்திரக்கரைகளில் அதிகமாயும் இருப்பின் சமுத்திரக்கரையிலிருந்து உள் நோக்கிக் காற்று அடிக்கும். சமுத்திரத்தின் வழியாய் வரும் காற்று மழைகொண்டு வந்தாலும் வரலாம். நமது சென்னை இராஜதானி முழுவதிலும் எவ்விடங்களில் காற்றின் அழுத்தம் குறைவு என்றும், எங்கே அதிகமென்றும், காற்று எந்தப்பக்கங்களில் எப்படி அடிக்கின்றதென்றும், மழை பெய்ய காரணம் உண்டோ என்றும் தீர்மானம் செய்ய உதவும்படி ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும், ஒவ்வொரு நாளும் காலையில் பரோமீடரின் நிலையைப்பற்றி சென்னையில் இதற்கென்று நியமித்து இருக்கும் ஒரு ஆபிசுக்குத் தந்தியடிப்பார்கள். அந்த சாஸ்திரப் பண்டிதர் பல ஊர்களிலுமிருந்து வருகிற தந்திகளைப் பார்த்து ஆலோசனை செய்து காலவிவரத்தை பத்திரிகைகளில் பிரசுரம் செய்வார். ஆகையால் பரோமீடரின் உபகாரம் விளங்குகின்றதல்லவா? பல இடங்களிலும் காற்றின் அழுத்தத்தில் வித்தியாசம் சொற்பமாய் இருந்தால் காற்று மெதுவாய் அடிக்கும். அப்படியின்றி மேற்குக்கரையில் காற்றின் அழுத்தம் மிக அதிகமாயும் கீழ் சமுத்திரக்கரையில் காற்றின் அழுத்தம் மிகக்குறைந்தும் இருந்தால் பெரிய புசல் காற்று மேற்புறமிருந்து கீழ்ப்புறம் அடிக்கும் என்று அவ்வுத்தியோகஸ்தர் எல்லா இடத்திற்கும் தந்திகொடுத்துத்தெரிவிப்பர். மழை,காற்று, முதலான காலவிவரங்களைக் கூடிய மட்டில் சரியாய் அறிந்துகொள்ள பரோமீடர் உபயோகப்படுகின்றது.



பரோமிடர்

நீர் வசிக்கும் ஊருக்குப் பக்கத்தில் பெரிய பள்ளிக்கூடம் ஒன்று இருப்பின் அங்கே சென்று அங்கே இணைத்து வைத்து இருக்கும் பரோமீடரைப் பார்த்து 4, 5 நாள் அதன் உயரத்தையும் எழுதி வந்து பத்திரிகைகளில் பிரசுரமாகும் மற்ற இடங்களின் உயரத்துடன் ஒத்துப்பார்த்து காலவிவரங்களையும் அதற்கு இசைவாக பரிக்ஷை செய்தால் மிகப்பயன் உண்டு.

☞ ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல் டி.

சர்வஜித்.

41-வது அத்தியாயம்.

மாளிகையை விட்டுக் காட்டை நோக்கிப் புறப்பட்ட கூட்டத்தைச் சிறிதுநேரம் விட்டுவிட்டு, நாம் தூக்குமரத்தினடிக்குச் செல்லுவோம். தூக்குமரம் நாட்டப்பட்டிருந்த விடமோ ஸ்திரீ புருஷர்கள் இருவருமடங்கின ஜனக்கூட்டத்தால் நெருக்கமாயிருந்தது. அவ்விடத்தைச்சுற்றிலும் இருபது மைல்களுக்குள்ளடங்கிய கிராமங்களிலிருந்து திரளான ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். சிறுவனுடைய இத் துக்ககரமான முடிவைக் காணவந்தவர்கள் ஐய்யாயிரம் பேர்களுக்குக் குறைவில்லை. ஆனல் எந்த வதந்தியானது ஒருசிறுவன் கடோரமான முடிவை யடையப்போகிறனென்பதைப் பரவச்செய்ததோ, அதே வதந்தி, அங்கு வந்தவர்கள் எல்லோரும் ஸர்வஜித்தைக் குறித்து பரிதாபப்படுவதற்குப் போதுமான அளவு, அவனது பூர்வ சரித்திரத்தையும் பரவச்செய்துவிட்டது. ஸர்வஜித் ஒப்பற்றதீரனென்பதையும், மிக அழகன் என்பதையும், எவருக்குமிணையில்லாத தயாளுவென்பதையும், மனிதர்களைப் பிரகாசிக்கச்செய்கிற எல்லா நற்குணங்களும் அமையப்பெற்றவனென்பதையும் அவர்கள் கேள்விப்பட்டிருந்ததால், இவ்வளவு மகத்துவங்கள் பொருந்திய ஒரு அரிய பிறப்பிற்கு இவ்வளவு பரிதாபமானமுடிவு ஏற்பட்டதே என்ற துக்கத்தாலும், அவ்வளவு மேன்மையான சிறுவனை அவன்இறப்பதற்கு முன் கண்ணாரப் பார்த்தாகிலும் வரலாமென்று அங்கு கூடினர்களே யொழிய, வேடிக்கைப் பார்த்துவிட்டுப்போகலா மென்றல்ல.

இதுநிற்க, கோட்டையிலுள்ள கூட்டம் பலகாரணங்களால் புறப்படத் தாமதப்பட்டபடியால், அவர்கள் காட்டை நெருங்கும்போது மணி ஒன்ருய்விட்டது. தூக்குமரத்தினருகில் நின்றகூட்டம் தீவட்டிகளின் வெளிச்சம் கிட்டநெருங்கி வருவதைக்கண்டது. இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் அத்தீவட்டிகளின் வெளிச்சத்தில் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்த உருவின பட்டாக்கத்திகளையுங் கண்டதுடன், எல்லோரையும் நிச்சப்தமாகச்செய்து கவனிக்கும்படி செய்த குருமார்களின் தெய்வ வணக்கத்தையும் கேட்டார்கள்.

மாளிகைக் கூட்டமானது சமீபிக்கவே, அப்பெருங் கூட்டம் வந்தவர்களுக்கு வழிசெய்து பிரிந்து நின்றது. கைக்கோடாலி களையும், கத்திகளையும் பிடித்திருந்த போர்வீரர்களுக்கு மத்தியில், நமது கதாநாயகன் தீவட்டிகளின் பிரகாசத்தில் நன்ருகக் காணப்பட்டான். தலை ஒருபுறம் சிறிது சாய்க்கப்பட்டும் கண்கள் கீழ்நோக்கியும் இருந்தன. முகம் வெளுத்திருந்தபோதிலும், அதில் பயமாவது, துக்கக் குறியாவது சிறிதுமில்லை. ஈசனது இஷ்டமே நிறைவேறும், அவர் எது செய்தாலும் அது அவரது அருளே யொழிய வேறல்ல வென்றும், உண்மையில் குற்றமற்றவனைக் கைவிடமாட்டா ரென்றும் அவன் மனதில் உறுதியான நம்பிக்கைஇருந்ததால், அந்த நம்பிக்கையின் மகத்துவத்தால் அவனது முகம் அவனை தெய்வப் பிறப்பென்று சொல்லும்படி பிரகாசித்துக்கொண்டும், பயமென்பதையே அறியாததுபோல் காட்டிக்

கொண்டும் விளங்கிற்று. அச்சமயத்தில் ஸர்வஜித்தின் முகத்தைக் கண்டவர்கள், "இம்மாசற்ற முகம் இவனது பரிசுத்தமான ஆத்மாவுக்கு மூடுதலென்றும், இவனது குற்றமில்லாத ஆத்மா தெள்ளிய சரீரத்தின் வழிபாய் ஜ்யோதிர்மயமாய் பிரகாசிக்கிறதென்றும்" தங்களுக்குள் சொல்லிக்கொள்ளலாயினர். ஆகைபால் அங்கு கூடியிருந்த ஜனங்களுடைய ஹிருதயங்களும், ஒன்றுகூட நீங்காமல் ஏககாலத்தில் நிரம்பிய அன்பாலும், அடங்காத துக்கத்தாலும் பரிதபித்து தத்தளித்தன.

இவ்விதமாக எல்லா மனதுகளையும் ஒரே உணர்ச்சி பிடித்தாட்டவே, வந்திருந்தவர்கள் எல்லாரும ஒரேகாலத்தில் தூண்டப்பட்டவர்கள் போல மண்டியிட்டு நிலத்தில் விழுந்தார்கள். ஸ்திரீகள் அடங்காத துக்கத்தால் விம்மியழுதார்கள்; புருஷர்கள தங்கள் கண்களில் ததும்பி வந்த கண்ணீர்களைத் துடைத்துக்கொண்டிருந்தார்கள். இப்படி துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தஜனங்கள்சிறுவனுக்கு யாதொரு தீங்கும் வரக்கூடாதென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள்.

மாளிகைக்கூட்டம் தூக்குமரத்தைச் சுற்றிலும் நின்றது; தீவட்டிக்காரர்கள் சுற்றியெல்லாம் வெளிச்சம்படும்படி இடைவெளிவிட்டு நின்றார்கள். இக்கூட்டத்திற்கு மத்தியில் ஆறுகுருமார்களோடு கூடவும் மற்றொரு மனிதனோடு கூடவும் ஸர்வஜித் நின்றான். மற்றொரு ஆள்யார்? அவன்தான் ஸர்வஜித்தைத்தூக்கிட நியமிக்கப்பட்டவன்.

இக்கொலையாளி தூக்குமரத்தில் நாட்டப்பட்டிருந்த ஏணியில் விரைவாய் ஏறி உயரத்திலிருந்தவிடத்தில் ஒருகெட்டியான கயிற்றை முடிச்சிட்டு மற்றநுனியை கீழே தொங்கவிட்டான். சடுதியில் ஏணியை விட்டிறங்கி, கயிற்றை சர்வஜித்தின் கழுத்தில் சுருக்கிடப் போக இருக்கையில், ஸர்வஜித் ஜில்லா அதிகாரியைப் பார்த்து, "நான் சாவதற்கு முன் இங்கு வந்திருக்கும் ஜனங்களிடத்தில் சில வார்த்தைகள்சொல்ல வேண்டியிருக்கிறது. குற்றமற்ற எனது நெஞ்சை இக்கயிறு தொடுவதற்குமுன் நான் சிலவார்த்தைகள் சொல்ல அனுமதி தரவேண்டும்" என்றான்.

உடனே கொலையாளியும் இரண்டடிகள் பின் சென்றான்; குருமார்களும் தங்கள்பிரார்த்தனைகளை நிறுத்தினார்கள். எங்கும் நிச்சப்தமாயிருந்தது. ஸர்வஜித்தும் பேச வாயைத்திறந்தான். அச்சமயத்தில் கூட்டத்தின் ஒரு கோடியில் ஒரு குழப்பம் உண்டாயிற்று. அடுத்த நிமிஷம் சந்தோஷத்தைக் காட்டுகிற கூக்குரல்கள் உண்டாயின. பரவசமாகச் செய்யக்கூடிய ஏதோ ஒருசெய்தி அக்கூட்டத்தில் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு காட்டுத்தீபோல் பரவிக்கொண்டு வருவதாகத் தோன்றிற்று. கூட்டத்தின் கோடியில் துவங்கி ஒருவர் பின்னொருவராய் மண்டிபோட்டிருந்தவர்கள் வெகு சடுதியாய் எழுந்திருந்தார்கள். எழுந்தவர்கள் "சிறுவன் காப்பாற்றப்பட்டான்; சிறுவன காப்பாற்றப்பட்டான். ஈசனுக்கு வந்தனம், ஈசனுக்கு வந்தனம்" என்றுபேரிரைச்சல்செய்து வழிவிட்டுக்கொண்டு பிரிந்துநின்றார்கள்.

யாருக்காக வழிவிட்டு நின்றார்கள்? யமலோகத்துக்கு இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் அனுப்பப்பட இருந்த ஸர்வஜித்துக்கு உயிர்ப்பிச்சை

கொடுக்க யார் வந்தார்கள்? நீண்டு தொங்கிக்கொண்டிருந்த தாடியோடு கூடின ஒருகிழவன் முதலில் வந்தான்; கவிவாணனுடைய உடைதரித்த ஒரு சிறுவன் பிறகு வந்தான்; சடைபோட்ட மயிரும், குழிந்தகண்களும், ஒட்டிப்போன உடம்பும், அழுக்கடைந்து கிழிந்திருந்த உடையும், பரிதாபத்தையுண்டாக்கக்கூடிய முகத்தையுடைய மற்றொரு சிறுவன் எல்லாருக்கும் பின்னால் வந்தான். முதலில் வந்தவன் முகுந்தன். இரண்டாவது வந்தவன் கோபாலன். கடைசியில் வந்தவன் யார்? கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த ப்ரேதமா? இறந்து போனவனுடைய பிசாசு ரூபமா?

முதலில் பார்க்கும்போது அப்படித்தான் தோன்றிற்று. ஆனால் எவன் மலையதிபதிகளுடைய கிடங்குகளொன்றில் அடைப்பட்டுக் கிடந்தானோ, எவன் எல்லாரும் இறந்து போய்விட்டதாக எண்ணினார்களோ, எவன் பிரபு புஷ்ய மித்திரருக்கு ஏக புத்திரனோ அந்த சுரேந்திரன் தான் கடைசியாக வந்தான். ஸர்வஜித்தினது தெய்வபலத்தாலும், அங்கு ஸர்வஜித்தின் பொருட்டு மண்டி போட்டிருந்தவர்களின் பிராத்தனையை நிறை வேற்ற வந்தவன் போலவும் ஸர்வஜித் அநியாயமாய் உயிரை இழக்காதபடி சமயத்தில் அங்கு வந்து குதித்தான் சுரேந்திரன்.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.

இல்லாள் கடமை.

3. சூத்திரம்:—வீட்டையும், சுசியாக, பலபுஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதாய், நன்றான தளத்தை யுடைத்தானதாய், பார்வைக்கு மனதைக்கவரக்கூடியதாய், முக்காலத்திலும் பூஜிக்கப்பட்ட தேவகிருகமாகச் செய்யவேண்டியது.—

விவரிப்பு—இதற்கு முந்திய சூத்திரத்தில் மனைவி குடும்ப சிந்தையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருந்தது. அந்த குடும்பசிந்தை எப்பேர்க்கொத்தது என்பதை விளக்க இந்த சூத்திரத்தில் ஆரம்பித்திருக்கிறது. வீட்டையும் என்று ஆரம்பித்ததால், குடும்பசிந்தையில் முதல் சிந்தை வீட்டைப்பற்றியது. இல்லத்தை நன்றாய் வைத்துக்கொண்டிருப்பவள் தான் இல்லாளாவள். இல்லை என்றால் இவள் இல்லாள் ஆகாள (இலலாள்) வீட்டையும், என்று, உம் என்கிற இடைக்குறியை உபயோகப்படுத்தினதால், குடும்பசிந்தையில் இது முதலாக எடுத்துக்கொள்ளப் பட்டபோதிலும், வீட்டின் சிந்தை குடும்பசிந்தைக்குச் சமானமென்பது கிரந்த கர்த்தாவின் அபிப்பிராயம்போலும். அதினால் குடும்பசிந்தைக்கு புருஷனபிப்பிராயத்தால் எடுத்துக் கொள்ளவேண்டுமென்கிறவிசேஷவிதியைஇதற்குத்தக்கவாறுஇங்கும் எடுத்துக்கொள்ளவேண்டியது: அதாவதுகுடும்பசிந்தையைஏற்கதன்சாமர்த்தியக்குறைவினாலாவது அல்லது வேறுஎந்தகாரணத்தினாலேயாவதுதகுந்த சந்தர்ப்ப மேற்படாவிடில் அதினால் வீட்டை சுத்தமாயும் நன்றாகவும் வைத்துக்கொள்வதை நிறுத்தக் கூடாதென்பது தோன்றுகிறது. இந்த அபிப்பிரா

யம் வெளியாகும்படி கிரந்தகர்த்தா எழுதுவதற்குக் காரணமுண்டு. உலகத்தில் ஒன்றைதொட்டுத் தான் ஒன்று என்கிற பழமொழி ஒன்றுண்டு. ஒருவிதத்தில் மனதிற்குச் சந்தோஷமும் உற்சாகமும் ஏற்பட்டால் அதுவே இன்னொன்றைச்செய்ய ஏதுவும், சாதகமுமாகிறது. ஒருவிதத்தில் மனதிற்கு சந்தோஷக்குறைவும் அவமதிப்பும் நேரிட்டால் அது மனதிலேயே குடியிருந்துகொண்டு மற்றொருவிதத்தில் நாம்நடக்கவேண்டியமாதிரிநடக்காதபடி செய்துவிடும்.எல்லாரும்உப்பும்காரமும்சாப்பிடுகிறவர்கள்தானே. (We are all made of flesh and blood only) ஆகையால், பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளிடம் உபாத்தியாயர் எப்போதும் ஆதரவுடன் பேசவேண்டியதாக இருந்தபோதிலும் ஒருக்கால் ஒருபிள்ளை வெகுநன்றாக படித்திருந்து அல்லது புத்தி சாதுரியமான வேலைசெய்திருந்தால் அதை விசேஷமாக ஆதரிக்காவிடில் இது அந்தப்பிள்ளை மனதில் உற்சாகக்குறைவை ஏற்படுத்தி அதனால் அவனுக்கு படிப்பிலேயே பொதுவாக எண்ணக்குறைவை ஏற்படுத்திவிடும். அப்படியே நம்முடைய வேலைக்காரன் ஒருவன், தன் எஜமானன் நன்மையின்பொருட்டு ஒரு நல்லகாரியத்தை ஏவப்படாமலே செய்தபோது அதைப்பார்த்து நாம் அவனை நன்குமதியாவிட்டால், பிறகு இவனுக்கு நம்மிடத்தில் வைமனசியம் (அதாவது வெறுப்பு) ஏற்பட்டு தான்செய்யவேண்டிய காரியங்களை நன்றாக கவனிக்காமல் போவது உலகத்தில் சாதாரணம். அந்தமாதிரியாகவே குடும்பமும் ஒருசிறிய உலகம். இதில் புருஷனுடைய பணிவிடைக்காகமட்டும் ஏற்பட்டவளல்ல பாரியை. இவளை இரண்டாவது உயிராக வர்ணிப்பதுகவிகளின் சாதாரண சமயமாக இருக்கிறது. இரண்டாவது சூத்திரத்தில் இவளுக்கு குடும்பசிந்தையை வகிக்க அதிகாரம் இருப்பதாகவும், மூன்றாவது சூத்திரத்தில் வீட்டைப்பற்றிய கவலை எடுக்கவேண்டுமென்றும சொல்லியிருப்பதால், வீட்டில் இவளுடைய ஸ்திதி (Status) மிகவும் விசேஷமானது (Peculiar).அதை வரையறுத்துப்பேசமுயல்வதைக்காட்டிலும் முயல்கொம்பு சம்பாதிக்கவாவது, மணலை செக்கிலாட்டி எண்ணை எடுக்கவாவது பிரயத்தினம் செய்யலாம்.இருந்தபோதிலும் எப்படியானல் கடவுளைக்காணவிடினும் அவர் செய்கைகளினால் அவர் குணகுணங்களைத் தெரிந்தமட்டும் போதிக்கமுயலுகிறார்களோ அப்படியே இந்தகிரந்தத்தில் கிரந்தகர்த்தா அனுபவயுக்திசாஸ்திரங்கள் மூலியமாய் தான் தெரிந்து பகுத்தறிவினால் கண்டுபிடித்த தருமங்களை இந்த சூத்திரங்களில் சொல்லியிருக்கிறார்.

மேற்சொல்லிய பிரகாரம் ஒன்றைத்தொட்டு ஒன்றாவதால் பரிசரிப்பதிலும், குடும்பசிந்தையை ஏற்றுக்கொள்வதிலும், இவளுக்கு ஒருக்கால் மனக்குறைவும் உற்சாகக்குறைவும ஏற்பட்டால் அதைத்தொட்டு வீட்டைப்பற்றிய சிந்தைகுறையகூடாது என்பதற்காக, உம்,—உரிச்சொல்லால் குடும்ப சிந்தையை ஏற்றுக்கொண்டால்தான வீட்டுசிந்தையை ஏற்றுக்கொள்ளவேண்டும என்றுநினைக்ககூடாது என்றும்,வீட்டுசிந்தையைக் காட்டிலும்குடும்ப சிந்தை உயர்ந்ததானாலும், குடும்பசிந்தையில் வீட்டு சிந்தை அடங்கிஇருந்தபோதிலும், குடும்பசிந்தையை எப்படி ஏற்றுக்கொள்ளவேண்டுமோ அப்படியே வீட்டை நன்றாகவைத்துக்கொள்ளவேண்டுமென்பதைக் காட்டினார்.

அதேகாரணத்தினால்,(உம், இடைச்சொல்லால்)வீட்டை நன்றாகவைத்துக்கொள்வதும்கணவன்எண்ணமாய் இருக்கவேண்டும்என்றுஏற்படுகிறது. அதா

வது அவன் சந்தோஷத்தின்பொருட்டு செய்யவேண்டும். இல்லாளிடில் அவன் மனது வீட்டிலிருக்கும் பொழுது சந்தோஷமாயிருக்க இதைவிட வேறு உபர்ந்ததில்லையென்போர் பலருளர். மேலும்பொதுவாய், இவள் குடும்பசிந்தை ஏற்றுக்கொள்ள கணவனின் நல்ல எண்ணம் இவளுக்கு வேண்டுமாதலால் அவன் நன்குமதிப்பை அடைய இது ஒரு காரணமாகும். முன்சொன்ன பழமொழி இங்கும் உபயோகப்படும் (ஒன்றைத் தொட்டு ஒன்றல்லவா?). இன்னம் குடும்ப சிந்தையானது வீட்டை நன்றாய் வைத்துக் கொள்வதைக் காட்டிலும் அதிக பிரயாசையையும் புத்தி கூர்மையையும் எதிர்பார்க்கக் கூடியது ஆகையால் இவள் வீட்டை நன்கு செய்வதாலேயே இவளுக்கு இருக்கும் சாமார்த்தியத்தையும், புத்தியின் நுட்பத்தையும் தெளிவையும் காண்பிப்பாள் போலும். புருஷனுக்கு இதன் மூலமாய் இவள் அபிப்பிராயத்தை தெரிந்து குடும்ப சிந்தையை வகிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்கிற சம்க்ஞை போலாகிறது.

இது மட்டுமல்ல: அகத்தினழகு புறத்தில் என்பதை எல்லாரும் சொல்லக் கேட்டிருக்கிறோம். முகமும், சரீரமும், மனத்தை காட்டிக் கொடுக்கிற பொல்லாத சாக்ஷிகளாக இருக்கின்றன: அப்படியே குடும்பத்தின் மனதை வெளிக்காட்டுவது குடும்பத்தின் புறம்—அதாவது வீடே. ஆகையால், வீடு எவ்வளவு நன்றாக இருக்கிறதோ அவ்வளவு நன்றாகத் தான் குடும்ப அந்தரங்கங்களும் இருக்கும். பலவீடுகளில் பெண்டீர்கள் மனதில் சந்துஷ்டியில்லாததால் வீட்டின் பண்டங்களும் பார்வையும் சரியான மாதிரியில் இல்லாமலிருப்பதைப்பார்த்திருக்கிறோம். அதினாலேயே பெண்டீர்களைச் சந்தோஷமாக பாதுகாப்பதைப்பற்றி புருஷர்களுக்கு பல இடங்களில் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அதினாலேயேதான் "யத்ரநாரியஸ்து பூஜியந்தே ரமந்தே தத்ரதேவதா:" என்று மனுஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. அதாவது எந்த இடங்களில் பெண்டீர்கள் பூஜிக்கப்படுகிறார்களோ அந்த இடங்களில்தான் தேவதைகள் விளையாடுவார்கள். இந்தப் பிரகாரமே சாஸ்திரங்களில் பெண்டீர்களுக்கும் புத்தி கூறப்பட்டிருக்கிறது. ஒருக்கால் புருஷன் சம்பாதிக்கவேண்டியதில் செய்யும் முயற்சியால் பலவித கவலைகளுடன் இருப்பதால் தன்னைச் சரியாக கவனிக்காமலாவது நன்குமதிக்காமலாவது இருந்துவிட்டால் அதைப் பெண்டீர்கள் பாராட்டக்கூடாது. சகுந்தலைக்கு புருஷன் வீட்டுக்குப் போகும்போது கண்வருஷி சொன்னபுத்தியாவது: புருஷனால் தோந்திரவு செய்யப்பட்டாலும், குறைவாக நடத்தப்பட்டாலும் கோபங்கொண்டு விரோதமாய் நடக்காதே—என்பதுதான். (பர்துர விப்ரகிருதாபி ரோஷணதயா மாஸ்ம ப்ரதீபம் கம:) இப்படியே நல்ல ஸ்திரீயையும் கெட்ட சுபாவ முள்ளவளையும்பற்றி பேசுமிடத்தில், நல்லவள் ஒருக்கால் புருஷனால் குறைவாக நடத்தப்பட்டாலும் அதை மனதிலேயே மறக்கடிப்பள் என்றும் துஷ்டசுபாவமிருந்தால் தண்ணீரில் விழுவேனென்று சொல்வள் என்றும் ஒருசுலோகத்தில் சொல்லியிருக்கிறது. (கதாசிதபி சேத்ததாமனஸி கேவலம்மஜ்ஜதி) இதனால் இவள் புருஷனிடத்தில் அபபவும் நல்ல எண்ணமும் பிரியமும் உள்ளவளாக இருக்கவேண்டியது என்று ஏற்படுகிறது. இப்படி இருப்பதை அவருக்கு தெரிவிப்பது அவசியம். அதனால் அவர் வீட்டிற்குவந்தபொழுது அவருக்குகவலைமறந்து சற்றுசாவதானமுமசந்தோஷமும்உண்டாகும். ஆகையால்இப்பேற்கொத்த அகத்தின் அழகு தன்னிடத்தில் இருப்பதாக புறத்தில் காண்பிப்பது நேரில்வரும்பொழுது தன் நடை

உடைபாவனைகளினாலேவும், எந்தகாலத்திலும் வீட்டைச்சரியாகவைத்திருப்பதினாலேயும்தான். இதற்காகவே அவர் எண்ணமாய் வீட்டை நன்றாய் வைத்திருக்கவேண்டுமென்று அருத்தமாகும்படி, கிரந்தகர்த்தா உம் உரிச்சொல்லை உபயோகப்படுத்தினார் போலவும்.

இன்னம், நம்மனதில் எவ்வளவு கஷ்டமிருந்தபோதிலும், சரீரத்தில் எவ்வித உபாதியிருந்தபோதிலும், புன்சிரிப்புடன் கூடிய சிறுகுழந்தைகளை கையிலெடுத்தவுடன் நாம் பரவசமாய், நம் கஷ்டங்களை மறந்து, சந்தோஷப்படுவதுடன், மனதிற்கு உற்சாகமும் தைரியமும் உண்டாகிற விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. அப்படியே வீட்டிற்கு வந்தவுடன் புருஷன் எவ்வளவு கவலையுடன் இருந்தபோதிலும், ஸ்திரீ சிரித்தமுகத்துடன் அன்புடன் புருஷனருகில் வந்து எதிர்கொண்டழைப்பதால் புருஷன் கோபக்குறிமாறி சாவதானமும், சந்தோஷமும்,உதாரகுணமும் அவன்மனதில் உண்டாவதைவெகு இடங்களில் பார்த்திருக்கிறோம்.இதனால் மனதில் இருக்கும் கஷ்டத்தையும் புறத்திலிருக்கும் சுகம் மாற்றி சுகமாக்குமென்று தோன்றவில்லையா ? வியாதிஸ்தர்களை கூடமனதிற்கு சமாதானமும் சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய இடங்களில் வைத்திருத்தல் மனத்தேர்ச்சியைக் கொடுத்து சந்தோஷத்தால் வியாதி நிவர்த்திக்கு காரணமாகுமென்பதையும் கேட்டிருக்கிறோம். இதனாலேயே மனோதத்துவமறிந்த பலமேற்றிசைய சாஸ்திரிகள் (Western Psychologist Physicians) நாம் கிருத்திரிமமாய் சிரிப்பதும், விளையாடுவதுமே அநேகவியாதிகளுக்குப் போதுமான சிகித்சை என்கிறார்கள். (The curative properties of artificial smile and laughter). ஆகையால் சரீரதத்துவமும் மனோதத்துவமும் இப்படி அமைந்திருக்கையில், தன் நல்ல உள்ளத்தைக் காட்டுவதற்கு மல்லாமல் கணவனுக்காக வீட்டை நன்றாய் வைத்திருப்பதும் சரியான காரணமல்லவா? ஆகையால் கணவனுக்காக என்பதால் அவர் சந்தோஷ மடைவதின்பொருட்டும், மனதின் கவலையை மறப்பதற்கும், சரீரத்திலாவது மனதிலாவது சுவஸ்தக்குறைவு இருந்தால் அது உடனே சுவஸ்தப்படுவதற்காகவும் கணவன் எண்ணமாய் வீட்டை சுத்தமாய் வைத்திருத்தல் நலமே.

ஒருக்கால் இந்தசிறந்த யோசனைகள் தோன்றாவிட்டால், அந்தப் பெண்டீர்களும் கணவன் எண்ணமாயாவது வீட்டை நன்றாக வைத்திருக்கவேண்டும்: அதாவது கணவனுக்கு இப்படி செய்வதில் பிரியம்போலிருக்கிறது; ஆகையால் இப்படிச் செய்வோம்; என்கிற பெண்டீர்களாக இருப்பதிலும் பிசகல்ல. அல்லது வீட்டைசரியாக இந்த பத்ததியில் வைத்திருந்தால்தான் கணவன் நம்மேல் கோபிக்காமலிருப்பர் என்கிற எண்ணத்துடன்கணவனிடமிருக்கும் பயத்தால் (கணவன் எண்ணமாய்) வீட்டை சுத்தமாக வைத்திருப்பவரும் உலகத்தில் இருக்கலாமென்றும் தோன்றுகிறது.

நன்றாகவைத்திருப்பதில் கணவனுக்கு எண்ணமில்லாவிடில் இவள் வீட்டைப்பற்றி கவலை ஏற்றுக்கொள்ளவேண்டுமா ? வேண்டாமா ? இந்த விஷயம் சற்று கவனிக்கக்கூடியதே. இவள் கணவனை பரிசரிக்கவேண்டுமென்று சொல்லிய முதல் சூத்திரத்தில் இந்த விஷயம் காணாததால், கணவனுக்கு இஷ்டமில்லாவிடினும் இவள் கணவனை பரிசரிப்பதும் அதன் மூலமாய் இருவரும் சந்தோஷப்படுவதும் இவள் கடமையாயிருக்கிறது.இதுவும் அதைப்போலொத்ததாயிருந்தால், இதை இரண்டாவது சூத்திரமாகச் சொ

ல்லியிருப்பர். அப்படி சொல்லாததால், புருஷனுக்கு இஷ்டமில்லாவிடில் இவள் இந்த விஷயத்தில் பிரவிர்த்திக்கக் கூடாது என்று ஏற்படுகிறது. இருந்தபோதிலும் அடுத்த சூத்திரத்தில் இதை வற்புறுத்துவதுடன் கோரர்த்தனசாரியரின் விசேஷ அபிப்பிராயமாகவும் எடுத்துரைத்திருப்பதால், புருஷனுக்கு இஷ்டமில்லாவிடினும், தன்னால், கூடியமட்டும் அவருக்கு மனதுக்கு விரோதமுண்டாகாதபடி வீட்டைநன்ருக வைத்திருக்க முயலவேண்டியது. தேன் வேண்டாமென்கிற வண்டு கிடையாது. ஆனதால், அதன் ருசி தெரியாததால் முதலில் அப்படி சொன்னபோதிலும், ருசி அறிந்த பிறகு சந்தோஷப்படுவர் என்றும், இதுவே அவர் மனதைக் கொஞ்சங் கொஞ்சமாய் மாற்றக்கூடியதென்றும் தெரிந்து அதற்குத் தக்கவாறு இவள் வீட்டை நன்ருகவைக்க எண்ணப்படவேண்டுமென்று தோன்றுகிறது. இனி வீட்டை எப்படி வைத்திருக்கவேண்டுமென்பதை விவரிப்போம்.

கே. எஸ். பத்மனப ஐயர், பி. ஏ., எல். டி.,

ஹிந்து சங்கீதம்.

"கல்கத்தா நகரத்தில் வசிக்கும் இந்திரதேவி என்கிற பெண்மணி பி.ஏ. பரீட்சையில் தேறின கல்விமானு யிருப்பதுந் தவிர ஹிந்து சங்கீத வித்தையின் சரித்திரத்தை ஆதிமுதல் தற்காலம் வரையில் தெரிந்துகொண்டவராயிருக்கிருர். இவர் ஒரு சபை முன்பாக ஹிந்து சங்கீத வித்தையைப்பற்றிச் செய்த உபந்நியாசத்தை இங்கே சுருக்கிச்சொல்ல விரும்புகிறேம். ஹிந்து சங்கீதம் அநாதிகாலந்தொட்டு வழங்கி வருகின்றது. அது தெய்வங்களுக்குப் பூஜைசெய்வதிலும் மத சம்பந்தமான மற்றச் சடங்குகளிலும் உபயோகப்பட்டு வருகின்றது. ஆகையால் ஹிந்துக்களுடைய வாழ்க்கையைப் பெரும்பாலும் அது பாதிக்கிறதாயிருக்கின்றது. சங்கீதத்துக்கு ஆதிகர்த்தா சரஸ்வதி. அது பரமசிவன் உலகத்தாருக்குச் செய்த பெருங்கொடை. தேவரிஷியான நாரதர் வீணையில் கானம் செய்துகொண்டு திரிலோக சஞ்சாரியாய் ஆகாசத்தில் போய்க்கொண்டிருக்கிருரென்று சொல்லப்படுகிறது. அப்ஸரஸ்திரீகள் தங்கள் நாட்டியத்தாலும் சங்கீதத்தாலும் தேவதைகளைப் பிரியப்படுத்திக்கொண்டு சுவர்க்க லோகத்தில் வசிக்கிருர்கள். யஜுர் வேதம் உண்டான காலத்தில் பலசங்கீத வித்வான்கள் வீணை வாசிப்போரும், வேணுகானம் செய்வோரும், சங்கத்தொனி செய்வோரும், பேரிகைமுழக்குவோரும் தோன்றியிருந்தார்கள். ரிக்வேதத்தில் வாய்ப்பாட்டுப் பாடுகிறவர்கள் சொல்லப்பட்டிருக்கிருர்கள். சாமவேதம் முழுமையும் தற்காலத்திலுங்கூட கானம் செய்யப்படுகின்றது. வேதத்துக்குப் பிறகு இதிகாஸங்கள் உண்டான காலத்தில், அதாவது வால்மீகி ராமாயணத்திலும், மகா பாரதத்திலும் சங்கீதவித்தை அனுஷ்டிக்கப்பட்டது விளக்கப்படுகின்றது. வால்மீக ராமாயணத்தைக் குசன், லவனென்கிற ராமபிரானின் பிள்ளைகள் வாத்தியத்தில் பாடினதாகச் சொல்லப்படுகின்றது. போர்வீரர்களின் செயல்களைப்பற்றிப் பொது கூட்டங்களில் பாடகர்கள் பாடுவது வழக்கம். பௌத்த சமயம் இந்தியாவில் பிரபலமா யிருந்தகாலத்தில் சிற்பவித்தை விசேஷமாய்த் திறமை பெற்றிருந்தாலும் சங்கீதவித்தை அவ்வளவாக ஆதரிக்கப்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் பிராமண மதம் மேம்பாடு பெற்றபோது சங்கீதவித்தையும்

எப்போதும்போல அனுபோகத்தில் வந்தது. அதுமுதல் மகம்மதியர் காலம் வரையில், அதாவது 12-ம் நூற்றாண்டுவரையில் ஹிந்துக்களின் பல சாஸ்திரங்களும் கலைகளும் முன்னுக்கு வந்ததுபோல சங்கீதவித்தையும் பிரபலமடைந்தது. நாடகம் உண்டானது அப்போதுதான். அரசர்கள் முன்பாகவும் சங்கீத சாலைகளிலும் ஆட்டங்களும் பாட்டுகளும் சேர்ந்த நாடகங்கள் நடிக்கப்பட்டன. நாட்டிய ஆசாரியர்கள் என்ற பிராமணர்கள் சங்கீத வித்தையை ராஜஸ்திரீகளுக்கும் மற்றவர்களுக்கும் அதே தொழிலாய்ச் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். இந்த வித்தையைப் பிராமணர்கள் தொழிலாகக் கொண்டிருந்தபடியால் அது தெய்வத்தன்மை பொருந்திய வித்தையெனக் கருதப்பட்டது. சங்கீதவித்தை காந்தர்வ வித்தையென்றும் அதைக் கிரமமாய்ப் பக்தியுடன் அனுஷ்டித்து வந்தால் அது மோட்சத்துக்கு வழியென்றும் எண்ணப்பட்டது. கோவில்களும் நாடகசாலைகளும் இந்த வித்தை பரவுவதற்கு முக்கியகாரணங்களாயிருந்தன. ஜனங்களுடைய சாதாரணக்கூட்டங்களில் பாட்டுகள் பாடப்பட்டுப் பாமர சங்கீதவித்தை ஒரு கிளையாகவும், உயர்ந்தவகுப்பார் பழையமாதிரியாக இந்த வித்தையை அனுஷ்டித்து வந்தபடியால் பண்டித சங்கீதவித்தை ஒருகிளையாகவும் உண்டாயின. வீடுகளில் சொற்பமனுஷியர் முன்பாக பாடகனொருவன் தனியாய்ப்பாடும் வழக்கம் இன்னும் உண்டானதில்லை.

மகமதியர் காலத்தில் ஆரம்பத்தில் சங்கீதவித்தை அதிகமாய் ஆதரிக்கப்படவில்லை. பேர்போன மொகலாயச் சக்கிரவர்த்தி அவுரங்கஸீப் தம்மை தம்பிரஜைகள் காணும்படியாக மெத்தைமேல் ஜன்னலில் வந்து தோன்றுவது வழக்கமாயிருந்தபடி, ஒருதினம் அவர் அப்படி வந்தபோது அவர் முன்பாகச் சிலர் பிணங்கொண்டு போகும் ஒரு பாடையைக்கொண்டு வந்து சங்கீதம் இறந்துபோயிற்று. அதைப்புதைக்கப் போகிறோமென்று சொன்னதாகவும், அதற்குச்சக்கரவர்த்தி “நல்லது குழியை ஆழமாய் வெட்டுங்கள், அந்தக்குழியிலிருந்து ஒலியும் எதிர் ஒலியும் கேட்காமலிருக்கட்டும்” என்று பதில் சொன்னதாகவும் ஒரு கதை சொல்லப்படுகின்றது. ஆயினும், மொகலாயச் சக்கரவர்த்திகள் அனைவரும் சங்கீத வித்தையை வெறுத்தவர்கள் அல்ல. ஆக்பர் காலத்தில் அநேக சங்கீத வித்வான்கள் அவரைச்சுற்றியிருந்தார்கள். டான்ஸென் என்பவர் சங்கீதத்தில் மகா கீர்த்திபெற்ற தலைவர்களில் ஒருவர். ஆக்பரால் ஆதரிக்கப்பட்டவர். மகமதியர் காலத்தில் தான் வீடுகளில் தனியாய்ப்பாடும் வழக்கம் அனுஷ்டானத்துக்கு வந்து இப்போது பிரபலமாயிருக்கின்றது. ஜாத்ரா (Jatra) என்பது புராணங்களிலுள்ள கதைகளில் ஒன்றையாவது அல்லது பேர்போன பெரியோர் ஒருவரையாவது கொண்டாடும் சங்கீதக்கூட்டம். அது இப்போதும் வழக்கத்திலிருந்து வருகிறது. கதைசெய்கிறவர்களும் அக்காலத்தில் உண்டானவர்கள். பஜனைகளென்று சொல்லும் பாட்டும் வாத்தியங்களும் ஒன்றாய் முழங்கும் சாமானிய ஜனங்களுடைய வழக்கமும் உண்டாயிற்று. இப்படியிருந்த சமயத்தில் வைஷ்ணவ மதமாகிய கிருஷ்ணமதம் தோன்றி ஹிந்து சங்கீத வித்தைக்கு ஒரு புது உயிரைக்கொடுத்தது. இந்த கிருஷ்ணமதத்தில் கிருஷ்ணுவுக்கும் ராதாவுக்கு மிகுந்த நேசத்தைப்பாராட்டும் பாட்டுகளே இப்போது ஹிந்துக்கள் பாடும் பாட்டுகளில் பெரும்பான்மையானவை. கிருஷ்ணனுடைய வேணுகானம் ஜனங்கள் மனதைப்போல தாழ்ந்த பிராணிகளுடைய மனதையும், மரம், கல் முதலியவைகளையும் மயக்கினதாகச் சொல்லப்

படுகிறது. கிருஷ்ணன் வேணுகானம் செய்தால் காற்று உலாவுவது நின்று போய்விடுகிறது; யமுனை நதி மேற்கு முகமாய்த்திரும்பி ஓடுகிறது; மீன்கள் நீந்துவதை நிறுத்துகின்றன; பசுக்கள் மேயாமல் பிரமிக்கின்றன; கன்றுகள் ஊட்டாமல் நிற்கின்றன.

ஆங்கிலேயர் இந்தியாவில் வந்த காலமுதல் ஹிந்து சங்கீதவித்தை சில அமிசங்களில் மாறுதல் அடைந்திருக்கின்றது. படித்த வகுப்பார் பழைய வைதிகப்பாட்டுகளை விட்டுவிட்டார்கள். ஜாத்ராக்கள் ஆங்கிலேய மாதிரியை பின்பற்றுகின்றன. நமது நாடகசாலைகளிலும் புதிதாய் ஆங்கிலேயர் மாதிரி போலப் பாடப்படுகின்றது. பிரம்ம சமாஜத்தார் தங்கள் ஆராதனைகளில் இந்தவித்தையை உபயோகிக்கிறபடியால் சங்கீதவித்தை பல அமிசங்களில் மாறிப்போகாமல் இருந்துவருகின்றது. பம்பாய் பக்கத்தில் போர்துகிய (Portuguese) மாதிரியாய்ப் பாடுவதும் ஆங்கிலேயரின் பாண்டுகள்(Band) போல விவாகசமயங்களில் பாண்டுகள் உபயோகப்படுத்துவதும் வழக்கமாகி வருகின்றன. நல்லவேளையாய்ப் பண்டித சங்கீதவித்தை அதனிடத்தில் சங்கீதவித்வான்களுக்குள்ள விசுவாசத்தால் மறையாமல் அனுஷ்டானத்தில் இருந்துவருகின்றது.

சங்கீத வித்தைக்கு இப்போது தக்கபடி ஆதரவு இல்லையென்று விசனப்படவேண்டி யிருக்கின்றது. தற்காலத்தில் வீடுகளிலெல்லாம் கிராமபோன் பிரபலமாக, அதற்குப் பண்டிதர்கள்கூட வணங்கவேண்டியிருக்கின்றது. ஹார்மோனியமும் பியானுவும் நமது வீடுகளிலும் நாடகங்களிலும் விசேஷமாய் உபயோகிக்கப்பட்டு வீணைபோன்ற நமது பழைய வாத்தியங்களை அருமையாக்கி வருகின்றன. ஆயினும், இரண்டொரு தலைமுறைகளுக்கு முன்னால் சங்கீதம் அதனாலுண்டாகும் சுகத்தைப்பற்றி மட்டும் மதிக்கப்பட்டுவந்தபோது அதன் சகவாசத்தில் இஷ்டமில்லாமல் படித்த யோக்கியர்கள் அதை அலட்சியம் செய்துவந்தார்கள். இப்போது அப்படியில்லாமல் குலஸ்திரீகள் கூட சங்கீதங் கற்றுத் தங்கள் பந்துமித்திரர்களைச் சந்தோஷப்படுத்தலாமென்று ஏற்பட்டிருக்கிறபடியால் இந்தவித்தை கெட்ட சகவாசத்தினின்றும் மீண்டுவருகின்றது.

இம்மாதிரி இந்திரதேவி தம் உபன்னியாசத்திற் சொல்லிவிட்டு முடிவில் ஐரோப்பிய சங்கீதத்துக்கும் ஹிந்து சங்கீதத்துக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்டினர். ஐரோப்பிய மாதிரியில் பல சப்தங்கள் இணங்கி ஒலிக்கின்றன. ஹிந்து சங்கிதத்தில் ஒரேவாத்தியம் அல்லது ஒரே பாடகன் இன்னிசையால் கேட்போரைப் பிரியப்படுத்துகிறான். ஐரோப்பியர் சங்கீதத்தை லௌகிக சுகத்துக்காக உபயோகப்படுத்துகிறவர்களானபடியால், அதில் பெருங்கூச்சல்கள் பல இணங்கி மனஸை உற்சாகப்படுத்திக் கிளப்பிவிடுகின்றன. ஹிந்து சங்கீதத்திலோ தெய்வ ஆராதனை முக்கியமானதால் மனதைச் சாந்தப்படுத்தி நிலைநிறுத்தும் சுபாவமுள்ள இன்னிசை முக்கியமாயிருக்கின்றது. ஐரோப்பிய சங்கீதம் பல சுறுசுறுப்புகளும் கவலைகளும் ஒன்றாய்க் கலக்கும் பகல்போலவும், ஹிந்து சங்கீதம் இந்த சுறுசுறுப்புகளையும் கவலைகளையும்விட்டு மனதை நிச்சலப்படுத்தும் இரவுபோலவும் இருக்கின்றன. நமது சங்கீதம் அதை அனுபவிக்கிறவனை அந்தந்த தினத்துச் சுகதுக்கங்களிலிருந்து விலக்கி, கண்ணுக்குப் புலப்படும்படியான ஜகத்தைத்தாண்டியுள்ள தனியான ஆத்ம லோகத்துக்குக் கொண்டுபோகின்றது."

☞ சுதேசமித்திரன்.

சமாச்சாரக் குறிப்பு.

மேனாட்டில் பசுக்கூட்டங்களை யுடையவர்கள், பால் கறப்பதற்காக ஒரு இயந்திரம் உபயோகித்து வந்தார்கள். இப்போது ஸ்விடன் தேசத்து ஓர் இயந்திரக் கலைஞர், மின்சார உதவியைக்கொண்டு பால் கறக்கக்கூடிய ஓர் நவீன இயந்திரங் கண்டு பிடித்திருக்கிறாராம்.

ஜெர்மனி தேசத்தார், மழை பெய்தலை யறிவதற்கு, ஒரு கருவியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதாவது ஒரு பாத்திரத்தில் ஜலத்தைவிட்டு, அதற்குள் ஒரு தவளையைப்போக்கி, ஒரு சிறு ஏணியை நாட்டி வைப்பார்களாம். அத்தவளை, அவ்வேணியின் மீதேறி மேலே வந்து உட்கார்ந்தால், நிச்சயமாய் மழை பெய்யும் என்பதற்கு ஒரு அறிகுறியாம்.

ஜூலைமீ 24உ பதினேழு ஆகாயவிமானிகள் பந்தயத்தின்மேல் எடிம்பரோ நகரத்துக்குச் செல்லுவதாக அன்று ஹெண்டான் விட்டுப்புறப்பட்டார்கள். வெட்ரயின்ஸ் என்பவர் ஏழுமணி நேரத்தில் எடிம்பரோ வந்து சேர்ந்தார். போமாண்ட் என்பவர் ஏழுமணி இருபது நிமிஷத்தில் வந்து சேர்ந்தார். வாலெண்டயின் என்னும் ஆங்கிலேயர் பன்னிரண்டு மணி நேரத்தில் வந்துசேர்ந்தார். மற்றவர்கள் பற்பல இடங்களில் இடையிலேயே தங்கிவிட்டார்கள்.

வீட்டுச் செலவைச் சிக்கனமாய் செய்வதும், வீட்டுச்சுகாதார முறைகளைக் காப்பதும், சமையல் முதலான காரியங்கள் செய்வதும், குழந்தைகளுக்குத் தக்கவேளைகளில் தக்க ஆகாரங்கொடுத்து வியாதியில்லாமல் திடகாத்திரர்களாய் அக்குழந்தைகளை வளர்ப்பதும் வீட்டுச் சாஸ்திரங்களாகும். இவைகளை ஸ்கூல் பெண்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று ஒருநிதி சேர்க்கப்பட்டு வருகின்றதென்றும், அதைவிட மகாராஜாவின் முடிசூட்டுக்கு உற்ற ஞாபகச்சின்னம் எதுவுமில்லையென்றும் 'டைம்ஸ்' பத்திரிகை எழுதுகின்றது.

மைசூர் மகாராஜா, மகாராணியுடனும், யுவராஜாவுடனும், தாய் மகாராணியுடனும், அரண்மனைச் சிப்பந்திகளுடனும், திவானுடனும், அவருடைய சிப்பந்திகளுடனும் அடுத்த டிசம்பர் மாதம் 1-ந்தேதி டெல்லி போய்ச்சேர்ந்து விடும்படி தமது சமஸ்தானத்தைவிட்டு வருகிற நவம்பர் மாதக் கடைசியிலேயே புறப்பட்டுவிடுவார். மற்றப்படி அவர்களோடு டெல்லி தர்பாருக்குச்செல்லும் சமஸ்தான உத்தியோகஸ்தர்களின்ஜாப்தா அடுத்த அக்டோபர் மாதத்தில்தான் வெளியாகும்.

டிரான்ஸ்வால் இந்தியர்களின் பிரதிநிதியாய் இந்நாட்டுக்கு வந்து அந்த இந்தியர்களின் கஷ்டநிவிர்த்தி நிதிக்கு ஊர் ஊராய்ச்சென்று அவர்களுடைய கஷ்டங்களை யெடுத்துச்சொல்லிப் பொருள்சேகரித்து வந்த மிஸ்டர் H. S. P. போலக்கை நேயர்கள் நன்றாய் அறிவார்கள். அவர் தமது மனைவி மிஸ்ஸஸ் போலக்குடன் இந்நாட்டுக்கு அடுத்த அக்டோபர் மாதம் வரப்போகிறார். அவர் இந்நாட்டில் சில மாதங்கள் சேர்ந்தாற்போற் தாமதிப்பார். கல்கட்டாவில் இந்த வருஷக்கடைசியில் நடக்கப்போகிற காங்கிரெஸ் மகாசபைக்கு வந்திருந்து அதன் நடவடிக்கைகளில் கலப்பார். டிரான்ஸ்வால் இந்தியர்களுக்காக அவர் மனப்பூர்வமாய் உழைத்தவராரானமையால் இந்நாட்டார் அவருக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் தகும்.

மேனாட்டில், பெல்ஜிய மென்ற தேசத்தின் தலைநகரான பிரசல்ஸ் என்னுமிடத்திலுள்ள, கல்லூரியில், தேகதத்துவ சாஸ்திர பண்டிதையான டோடேய்கோ என்னும் மாது, சில பரீட்சை செய்து, மாமிச முண்ணாதவரே, கொடிய பசியையும் பொறுக்கக் கூடுமென்றும், நல்ல பலாட்டியரென்றும், சுகசரீரிகளென்றும் தெரிந்து, தானும் மாமிசம் உண்பதை வர்ஜனஞ் செய்துவிட்டாளாம். அமெரிக்கப் பண்டிதரொருவர், பாலியத்திலிருந்தே இக்கொள்கையைக் கொண்டு நன்மை பெற்றதாக "ட்ரூத்" என்னும் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

ஸ்வாமி விவேகாநந்தரின் தாயார் புவனேசுவரி தேவி போனவாரம் செவ்வாக்கிழமை திடீரென இறந்துபோய் விட்டாரெனக் கல்கட்டாவிலிருந்து சமாசார மெட்டியிருக்கிறது. ஒரு வாரத்துக்கு முன்தான் அந்த அம்மாள் ஜகந்நாதத்திலிருந்து திரும்பி வந்தாராம். வரும்போது காட்டுச் சுரத்தால் (Malaria) அந்த அம்மாள் வருந்திக்கொண்டிருந்தாராம். ஆனால் இவ்வளவு சடுதி மரணம் அந்த அம்மாளுக்கு நேரிடுமென எதிர் பாராத அந்த அம்மாளின் குடும்பத்தார் மிகுந்த கிலேசம் மேலிட்டுப் போயிருக்கிறார்களாம். சுவாமி விவேகாநந்தரின் பிற்காலப்பெருமைக்கு அந்த அம்மாள்தான் மூலகாரணமென்று நாம் சொல்லவேண்டியது அநாவசியம்.

பஞ்சாப் யூனிவர்ஸிடியில் இந்துப் பெண்களுக்கு வைதிக வகுப்பார் ஆங்கிலம் படிப்பிப்பது மிகவும் அருமையானது. இந்த வருஷம் 2 வைதிக இந்துப் பெண்கள் படிப்பிக்கப்பட்டு, மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினார்களாம். இவர்களோடு ஒரு மகமதியப் பெண்ணும் தேறியிருக்கிறாளாம். இந்த பஞ்சாப் யூனிவர்ஸிடியில் 4242 மாணாக்கர் பரீக்ஷைக்குச் சென்றனரென்றும், 1980 மாணாக்கர் தேறினரென்றும் சமாசாரம் எட்டுகின்றது. இந்த இரண்டு இந்துப் பெண்களின் முன்மாதிரியை அனுஸரித்து மற்ற இந்துப் பெண்களின் பெற்றோரும் வைதிக வகுப்பினரா யிருந்தாலும் துணிவுடன் தமது பெண்பிள்ளைகளைப் படிப்பிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவில் காஞ்சொறி யிலைபோல, தொட்டால் அல்லது உடம்பில் பட்டால் அகோரமான எரிச்சலை யுண்டாக்கும் இலைகளையுடைய ஒரு மரவகை பார்மோஸா தீவில் வளர்கிறதாம். 10 அடி உயரம் வளரக்கூடியதாய் நீண்ட இலைகளையுடையதாய் இருக்கும் இம்மரத்தை அந்நாட்டார் "மனிதரைக் கடிக்கும் நாய்" என்று பொருள் கொண்ட பெயரிட் டழைக்கிறார்கள். ஆஸ்ட்ரேலியாவில் இவ்வகையை விடக் கொடியதாய் 15 அடி உயரம் வளரக்கூடிய ஒருவகை மரம் இருக்கிறது. இதன் இலை குதிரைகள்மேல் பட்டால், அவைபடும் துயரை அவற்றைக்கொன்றே நிவர்த்தி செய்யவேண்டி யிருக்கிறது. நாய்கள் இலைமேல் உறைந்தால் தம்மைத்தாமே கடித்துக் கொண்டுதவிக்கும் தவிப்புக்கு அளவில்லை. சென்னை ஹார்டிகல்சரல்ஸொஸைட்டிதோட்டத்தில்இவ்விதமானமரம்ஒன்றுஇருந்து, இப்போதுபட்டுப்போய் விட்டதென்று தெரிகிறது.

சென்னையிலும், கும்பகோணம் தஞ்சைமுதலிய வெளியூர்களிலுமுள்ள காப்பி ஹோட்டல்களில் அரக்கு என்னும் பெயருடன் சுத்தக் காப்பிக்கஷாயத்தோடு கலக்கப்படும் சியக்காய் கஷாயத்தால் காப்பிக்குப் புதியருசி உண்டாக, காப்பி குடிக்கும் ஜனங்கள் க்ளபபுக் காப்பிக்குச்சமானமா என்று சொல்லிக்கொண்டு, வீட்டில் மாடுகறந்து, காப்பிபோட்டுச் சாப்பிட சௌ

கரிய மிருக்கின்றவரும், அதை அலட்சியம் செய்து விடுகிறார்கள். இந்த சியக்காய்க் கஷாயத்திற்கு மருந்து முறையில் பலநற்குணங்களிருந்த போதிலும் காப்பியோடு கலக்கப் பட்டால் அப்பொழுததற்கு என்னகுண முண்டாகுமோ என்று அஞ்சப்படுகிறது. இந்த நகரின் சரீராரோக்கியத்தைக் கவனிக்கும் ஆபீஸர் காப்பிக் கிளப்பையும் ஆகார திரவியங்கள் விற்கும் கடைகளையும் கவனிக்கும்படி ஏற்பாடுசெய்துகொண்டுவருகிறார். மேற்கூறிய சியக்காய்க் கஷாயம் சேர்த்துக் காப்பி கொடுக்கப்படும் விஷயத்தைச் சோதிக்கவென்றே அப்போதைக்கப்போது அவ்வாபீஸரால் காப்பிக்கிளப்புகளும், மிட்டாய்க் கடைகளும் சோதனை செய்யப்படின் மிக நன்மையுண்டாகும்.

டெல்லி தர்பார் சமயத்தில் பதக்கங்கள் யாவருக்காவது வழங்குகிறதா, அப்படி வழங்குவதா யிருந்தால், யார் யாருக்கு என்ன என்ன பதக்கங்கள் வழங்குகிறது, என்ற விஷயம் இது வரையில் ஆலோசனையிலிருந்து வந்ததாய்க் காண்கிறது. இப்போது அவ்விஷய சம்பந்தமாய் செய்யப்பட்டு வந்த ஆலோசனை முடிந்து போய்விட்டது. தேசமன்னர்களுக்கு பொன்னாற் செய்த பதக்கங்கள் வழங்குகிறதென்றும், மற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் வழங்குகிறதென்றும், பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு நிக்கலில் செய்யப்பட்ட மதாணிகள் (Medal lions) வழங்குகிறதென்றும் தீர்மானமாயிருக்கிறதாம். பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு வழங்கப்படும் மதாணிகளின் ஒரு பக்கத்தில் ஜார்ஜ் அரசர், மேரிராணி, இவர்களின் உருவப்படங்கள் அச்சுக்குத்தப்பட்டிருக்குமாம். மற்றொரு பக்கத்தில் டெல்லியென்ற வார்த்தையும் தர்பார் நடந்த தேதியும் அச்சுக்குத்தப்பட்டிருக்குமாம்.

பங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீநிவாச மந்திரத்தில் போனவாரம் ஸ்திரீகள் கூடிக்குலாவினது மன்றி சில பிரசங்கங்களும் செய்தார்களென்று அறிகிறோம். திவான் மிஸ்டர் ஆனந்தராவின் மனைவியாகிய சுந்தரபாயம்மாள பிரசிடென்டாக இருந்தார். ஸர் P. N. கிருஷ்ணமூர்த்தியின் குடும்ப ஸ்திரீகளும் மிஸ்டர் புட்டண்ண செட்டியின் மனைவியாரும் மற்றப் பெரிய மனுஷர் வீட்டு ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். பிரசிடெண்ட் சுந்தரபாயம்மாளின் சொற்படி சௌபாக்கியவதி கங்கம்மாள் வந்திருந்தவர்களைப் பார்த்துப் படிப்பு விஷயமாய்ச் சில வார்த்தைகள் சொன்னார். அவர் சொன்னதில் ஹிந்து ஸ்திரீகள் பழைய காலத்து மாதிரிகளில் நல்லவைகளைக் கைவிடக் கூடாதென்றும் தெய்வபக்தி, தயை, சாந்தம்முதலிய நற்குணங்கள் அவசியமென்றும், தன்மறுப்பும், கர்வமின்மையும் படித்த ஸ்திரீகளுக்குப் பொருத்தமென்றும் சொன்னதைக் கவனிக்கவேண்டும். பிறகு, சௌ. ரங்கம்மாள் ஆங்கிலத்தில் லோயர் செகண்டரி பரீட்சை தேறினதற்காக உபசாரமாக சில வார்த்தைகள் சொல்லப்பட்டு சில வெகுமதிகளும் கொடுக்கப்பட்டன. பிறகு சங்கீதங்களுடனும் மங்கள வாழ்த்துகளுடனும் கூட்டம் கலைந்தது.

பிரிட்டனி என்னும் இடத்திலிருந்து வெகு தூரத்தில், மனிதவாசமில்லாத கொர்டோனிஸ் என்னும் இடத்தில் ஒரு தீபஸ்தம்ப மிருக்கிறது. அதில் விளக்குப் போடுவதற்கு ஒரு மனிதனுண்டு. அவனுக்கு 4 குழந்தைகள் உண்டு. அவன் சென்ற ஏப்ரல்மீ சுகவீனனாய்ப் படுக்கையிற் கிடந்தான். அவன் மனைவி, அவனுக்குப் பதில், தீபத்தை வைக்கப்போனாள். அதற்குள் அவன் இறந்துவிட்டான். அவள் வந்து பார்த்து விசனப்படும்

போது ஒரு பையன், "மேலே சுழலவேண்டிய விளக்கு சுழலவில்லை" யென்றான். இவள் தன்னாலான மட்டும் பார்த்து முடியாமல் தன் பிள்ளைகளில் இருவரை, உச்சிக்கொண்டு போய் அவ்விளக்கின் இயந்திரத்தைச் சுற்றும்படிச் செய்துவிட்டு, தானும் மற்ற இரண்டு பிள்ளைகளும், இறந்தவனருகேயிருந்தார்கள். உச்சியில் இரண்டு பையன்களும் விடியும் வரையும் இயந்திரத்தைச்சுற்றிக்கொண்டே யிருந்தார்கள். கப்பலுக்கு அபாயம் வந்துவிடுவதைத் தடுப்பதற்கு ஏற்பட்டிருக்கும் இவ்விதமான தீபஸ்தம்பங்களில், இயந்திரம் சுழலாவிட்டால், கப்பல்கள் வழி தப்பிப் பாறைகளில் மோதிக்கொள்ளும். புருஷன் இறந்தும், வேலையில் ஜாக்கிரதையாக அவள் இருந்து செய்தது, எல்லாராலும் அதிசயமாகக் கருதப்படுகிறது.

நெல்லூர் கவர்ன்மெண்டுப் பெண்பாடசாலையின் பரிசளிப்புக் கொண்டாட்டம் பிள்ளைகளின் ஸெகெண்டரிஸ்கூல் கட்டடத்தில் நடைபெற்றது. ஸப்ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் P. ரங்கராவ் பந்துலுகாரு அக்கிராஸனம் வகித்தார். பிள்ளைகளின் ஸெகெண்டரி பாடசாலை ஹெட்மாஸ்டர் மிஸ்டர் B. வெங்கடப்பய்யா பந்துலு ஒரு பிரஸங்கம் செய்தார். அப்பொழுது ஸ்திரீகள் படிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துப்பேசினர். பாடசாலைப் பெண்கள் இடையிடையே பாடினார்கள். ஹெட்மாஸ்டர் பிறகு ஸ்கூல் ரிபோர்ட்டைப்படிக்க ஆரம்பித்தார். அப்பொழுது அப்பள்ளிக்கூடத்தில் 133 பெண்கள் படிக்கின்றனரென்றும், இப் பெருந்தொகையினர் படிப்பது, பெண்களின் பெற்றோர் தமது சிறுமிகளைப் படிக்கவைக்க வேண்டுமென்று கொள்ளும் ஆவல் மிகுதியை விளக்குகிறதென்றும் சொன்னர். பிறகு அவர் இப்பாடசாலைக்குக் கட்டடம் போதாதென்றும், அதிகக் கட்டிடம் கட்டுவதற்குப் போதுமான திரவிய சகாயமில்லை என்றும் கூறி, அந்த சகாயத்தை அவ்வூர் பொதுஜனங்களிடமிருந்து தாம் எதிர்பார்ப்பதாகவும், அடுத்த வருஷம் ஸ்கூல் ரிபோர்ட்டைப்படிக்கும் போது இப்பொழுதுபோல கட்டிடமில்லை என்ற குறையைத் தாம் சொல்லவேண்டிய அவசியமிராது என்று தாம் நம்புவதாகவும் கூறினர். கடைசியில் தாம்பூல வினியோகமாகி மீட்டிங்கு கலைந்தது.

சைதாப்பேட்டைத் தொழிற் பெண் பாடசாலையின் பரிசளிப்பு வருஷக்கொண்டாட்டம் இந்தமாதம் 15-ம் தேதி நடைபெற்றது. அவ்வூர் கனவான்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள். மிஸ்டர் H. S. டங்கன் அக்ராஸனம் வகித்தார். பெண்சிறுமிகள் பாடியும் கோலாட்டம் போட்டும் கதைகளை நாடகமாக நடித்துக் காட்டியும் வந்தவர்களை மகிழ்வித்தனர். ஸ்கூல் ரிபோர்ட்டை ஹெட் மிஸ்ட்ரஸ் படித்தாள். அதிற் கண்ட விவரங்களால் அப்பாடசாலை மிகவும் ஒழுங்காக நடத்தப்பட்டு வருகிறது என்பது விளங்கிற்று. மிஸ்டர் H. S. டங்கன் "இப்பாடசாலை தொழிற் பெண்பாடசாலை எனப் பெயர் பூண்டு இவ்வளவு நல்ல வேலைகளைச் செய்திருக்கிறது என்று கேட்க மகிழ்ச்சியைத் தருகின்றது என்றும், கவர்ன்மெண்டாரால் இது கவனிக்கப்படவேண்டுமென்று தாம் விரும்புவதாகவும், இப்பொழுதுபோல நல்ல வேலைகளைச் செய்துகொண்டு கிருககிருத்தியங்களில்பிற்பாடு பாடுபடவேண்டிய சிறுமிகளைப் பழக்கி, அவர்களுக்கு நல்லறிவையும் சன்மார்க்கத்தையும் போதித்துக்கொண்டு இப்பாடசாலை சிறப்புற்று விளங்குமென்று தாம் நம்புவதாகவும்" கூறினர். இவர் சொன்னது உண்மையே. இவரை மற்றவர்களும் பின் பற்றினல் நலமல்லவா? கடைசியில் சேர்மனுக்கு வந்தனமளிக்க, 'அரசனை இறைவன் ரக்ஷிக்க' என்ற பாட்டோடு மீட்டிங்கு கலைந்தது.

சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத்தடுப்பது நலம்.

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலியவியாதிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீனமுள்ளவர்களைப் பிடிக்கிறது. அவ்விதமுள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத் தாங்குவதுகஷ்டம்

SCOTT'S Emulsion

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத்தடுத்து சரீரத்தில் தளர்ந்த நரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும், சதைகளைப்புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்ட பின் இதன் அனுபவம் தெரியும்.

கையினால் தொடப்படாமலே செய்யப்படுகிறது.

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்காட் அண்டு பௌன் கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன் இங்கிலாந்து.

சீனாவிலுள்ள பெரிய மதில்.